தனிப்பிரதி விலை { உள் நாடு 1½ அணா / வெளிநாடு 1¾ அணா

**KUDI ARASU.**

Reg. No. M. 2041

# குடி அரசு

| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் ... | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு

ஆசிரியர்: ஈ. வே. ராமசாமி.

| | |
|---|---|
| வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு | ரூ. 1. |
| கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு | ரூ. 2. |
| நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம் | |

மாலை 5 | ஈரோடு சுக்கில ஆண்டு சித்திரை மீ 30உ. (12—5—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 2



## வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

## "பகுத்தறிவு."

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குபகுத்தறிவைவளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விட மனிதனுக்குப்பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும். அதை அனுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும். அன்றியும் தமிழ் நாட்டில்உள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள்.

விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

(f)

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0



# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தக சாலை.

244, தாங்கசாலைவீதி, சென்னை.

(4-a)

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுருசுருப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சவம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் கொ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை கொ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல ரோகங்களுக்கும் ஸ்தானமான அநுபவ பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். தீர்ந்துப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,

(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.

தங்க மேடல்கள் பெற்ற

## மலையாள நாட்டுத் துணிகள்.

இரணியல் நேரியல் முதலிய வஸ்திரங்கள், தேர்ந்த துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செலவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
(1) Travancore.

## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டைசாட்டுபொத்தான்கள் செட் 12; டை கல்வைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; சேர்ந்தியான கத்தி 1; காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் சீவிப்புடன் கூடிய ரப்பர் 1; பலரகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மாணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர்படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

இ. கிருஷ்ணா ஏஜன்ஸி

(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46-பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் வயண்ணிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறுயல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனும்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட

உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0

வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
மதராஸ்.

(4-g)

## பிரஸ் விற்பனை.

அறிவுவிளக்கம் பத்திரிகை அச்சாகிக் கொண்டிருந்த foolscap sixe colombian press (பூல்ஸ்கேப் சைஸ்) (H-W-Caslon & co London) சுமார் 300—ரூபா விலைக்கு விற்பனைக்குத் தயாரில் இருக்கிறது. 3/8 அங்குலம் தைக்கக்கூடிய Wire stapling சுமார் 60 ரூபா. வேண்டுவோர் நேரில் வரவும்.

ஆ. கிருஷ்ணசாமிப் பிள்ளை,
உடுமலைப்பேட்டை.

பைரவாஞ்சனம்:—நீராத தலைவலி, பல்வலி நிவாரணி, புட்டி 1க்கு ரூ. 0—5—0
டஜன் 1க்கு ரூ. 3—0—0

பைரவர்சஞ்சீவிதைலம்:—சகல மேகரோகநிவாரணி பாட்டல் 1க்கு ரூ. 3—0—0
அரை பாட்டல் 1க்கு ரூ. 1—12—0

பைரவர்சஞ்சீவிலேகியம்:—சகல உஷ்ணரோகநிவாரணி சேர் 1க்கு ரூ. 5—0—0
அரை சேர் ரூ. 2—12—0

பைரவர்பற்பொடி.—பாக்கட் 1க்கு ரூ. 0—1—0 டஜன் 1க்கு ரூ. 0—10—0

பைரவர் கம்பெனி, ராஜாத் தெருவு பழனி.

## வனமலர்ச்சங்கம் 4வது ஆண்டு விழா.

சென்ற ஏப்ரல் 27, 28-உகளில் வனமலர்ச்சங்கம் 4வது ஆண்டுவிழா கொடுமுடி சங்கர வித்தியா சாலையில் திருவாளர் வ. அழகப்பன் பி. ஏ. பி. எல் அவர்கள் தலைமையின்கீழ் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. திருவாளர் ல. கி. முத்துசாமி அவர்கள்கொடியேற்றினர். அதுகாலை சென்னை, திருச்சி, மதுரை, கோபி, முசிரி, கொடுமுடி முதலிய கிளைச்சங்கங்களின் அறிக்கைகளை அவ்வக்கிளைகளின் காரியதரிசிகள் வாசித்தனர். காலஞ்சென்ற தேசபக்தர்கள் லாலாலஜபதி, பனக்கல் அரசர். ம. ரா. குமாரசாமியார் முதலியோர் பிரிவுகுறித்து அனுதாபங் காட்டப்பட்டது. பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மறுநாள் திரு. வ. அழகப்பன் பி. ஏ. பி. எல் அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் 'தமிழரின் சமூகநிலை' என்பதுபற்றி திருவாளர்கள் கா சுப்பண்ணு ச. து. சுப்பிரமணியம் ச. ப. வெங்கடேச சர்மா முதலியோர்கள் விரிவுரை நிகழ்த்தினர்கள் என்று பொதுநிலைக் கழகக்காரியதரிசி திரு கு. ச. பெரியசாமி அறிவிக்கிறார்

## ஏல விற்பனை.

செங்கல்பட்டு முனிசிபல் கவுன்சிலைச் சேர்ந்த தண்ணீர் சர்பாராச்சாலையில் இருந்த நீராவியினுல் தண்ணீர் இறைக்கும் யந்திரங்களை திம்மாவரத்தில் 1929 ஹ மே மீ 24ந் தேதி வெள்ளிக்கிழமையன்று காலை 9 மணிக்கு பகிரங்கமாக ஏலம் போடப்படும்.

(1) 8'—6" x 3'—9" உள்ள ரெட்டாக்கு சொக்கிரேன் (Chcokirane) பாயிலர், ஒரு சதுரபாகத்திற்கு 100 பவுன் உச்ச சக்தியுள்ளதும் 8 குதிரை யோட்டமுள்ளது—2.

(2) 4 அங்குலம் பருமனுள்ள ஆகாஷணையும் 3 அங்குலம் பருமனுள்ள வெளியிடு தலையும் அடங்கிய படுத்தபடியுள்ள டுப்ளே (Duplox) நீராவியினுல் நடத்தக்கூடிய நீரிறைக்கும் வர்த்திங்குடன் (wirthington) பம்புகள்—3

இது விஷயமான தகவல்களும் ஏல நிபந்தனைகளும் பெற அடியில் கையொப்பமிட்டவருக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம்.

M. Vethachalam.
அக்கிராசனுதிபதி.

## பார்ப்பனீயத்தை ஒழித்தவர்கள்.

திருவாளர்கள் —

க. மு. நாராயணமூர்த்தி,
சேலம், செவ்வாய்ப்பேட்டை

ம. ராஜு பிள்ளை,
கப்பாசம்பேட்டை, கூடலூர்

ம. சி. பார்த்தசாரதி
மஞ்சகுப்பம்

மே. ராமையா பிள்ளை
திருநெல்வேலி, பேட்டை

ஓ. ஏ. வெங்கடாசலம்
கர்ணம், ஒலக்கூர்

ச. வேலாயுத உடையார்
மகாதேவி, முசிரி.

ச. குருசாமி உடையார்,
மகாதேவி, முசிரி.

வா. பா. கிருஷ்ணப்பன்
மண்டோர், F. M. S.

ப. இராமசாமி
கொல்லங்கோடு

இ. ரா. அருணுசலம்
கொல்லங்கோடு

பி. எஸ். பலவேசம்
பொவாலா

எஸ். முத்துசாமி
சோமாதேவி

## சாதிப்பட்டத்தையும் சமயக் குறிகளையும் துறந்தவர்கள்.

திருவாளர்கள்:—

ஆர். வரதராஜுலு.
காசை, வெளிப்பாளையம்.

ஓ. ஏ. வெங்கடாசலம் பிள்ளை
கர்ணம் ஒலக்கூர்

18-4-29 தேதி கோயமுத்தூர் ராயல் சைக்கிள் அண்டு போட்டோ ஒர்க்ஸ் என்ற பெயருள்ள கடையில் கூடிய கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானப்படி அடியிற் கண்டவர்கள் சாதிசமயக் குறிகளையும் பூணூலையும் துறந்திருக்கின்றனர்.

கோயமுத்தூர் திருவாளர்கள் பி. எம். ராமையா (மணியம்) பி. என். கருப்பண்ணு, சு பா. சுந்தரம், ஆர். நாராயணசாமி, எம். சித்தையா, கே. விஜயராகவன் (டாக்டர்) தங்கவேலு, சிதம்பரன், பி. கணபதி (பள்ளபாளையம்) என். சின்ராஜ் எல். பி. பிரான்சிஸ் இ. எபினேசர் ஜெ. ராஜரத்தினம் வி. கன்னையா (டீணி அண் கோ)

ஏ. எஸ. ராஜேந்திரன் சிலோன்

பி. கி. ஆறுமுகம் சிலோன்

டி. எம். திரவியம் பேருவலை

ஆ. கு. சண்முக சுந்திரம்
சாக்கா எஸ்டேட் சிலியோ

வா. பா. கிருஷ்ணப்பன்
பண்டோர் சாக்கா எஸ்டேட் சிலியோ

பெ. சிதம்பரம்
லிங்கி எஸ்டேட் ரந்தாவ்

ஆர். ரங்கசாமி
சக்கிரவாரப்பட்டி


கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA.



ரொம்பவும் குறைந்த விலை ரூபா 2—15—0.

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு $3\frac{1}{2} \times 2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமானகளுடனும் அனுப்பப்படும். சிறிது நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

கானடியன் வாட்சு பீபில், ஜி. டி, மதராஸ்.

## சீதையை குற்றவாளி யாக்கியது

# சிவனும் விஷ்ணுவும்.

### கைவல்லியம் எழுதுவது

சீதை விபசாரி என்று சுயமரியாதைக்காரர்கள் சொல்லுவதாக திரு. கலியாணசுந்தர முதலியாரும், திரு. வடிவேல் செட்டியாரும் சொல்லுகிறார்கள். அதனால் சனங்கள் கோபமடைந்து சுயமரியாதைக்காரர்களை வெறுத்து தன்புறுத்துவார்களென நினைக்கிறார்கள். சீதையைக்குற்றம் சொல்லவில்லை. அப்படியிருந்தும் விவகாரத்திற்கு ஏற்பட்ட காரணங்களைச் சொல்லுகிறேன். உங்களுடையபொது அறிவினால் ஆலோசியுங்கள். சுயமரியாதைத்தொண்டர்கள் பல இடங்களுக்குப் போவதாலும் பேசுவதாலும் தர்க்கங்கள் ஏற்பட ஏது விருப்பதாலும் அவர்களும் இதை கவனத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

தாரை, மண்டோதரி, அகலிகை, சீதை, துரோபதை ஆகிய ஐந்துபேர்கள் பதிவிரதைகளென்று சொல்லி, துரோபதையை பழம் பொருந்து சர்க்கத்தாலும், தாரையைச்சுக்கிரனாலும், அகலிகையை தேவேந்திரனாலும் கற்பிழந்தவர்களெனக்காட்டி. சீதையை ராமாயணக் கதையால் சீதையின்பேரில் சந்தேகப் படும்படியாக எழுதி அதைச் சமயபுராணக் கதைகளின் முன்னால் எழுதியிருப்பது பெண்களையே அவமானப்படுத்துவதாகுமென்றும், அந்த சமயப்புராணங்களும் பெண்களைப்பற்றி எழுதியிருக்கும் கதைகளும் ஞாயவிரோதமானதென்று சித்திரபுத்திரனால் "ஐந்திற்கு இரண்டு பழுதில்லை" என்னும் வியாசம் "குடிஅரசி"ல் எழுதப்பட்டிருந்தது. அதைவைத்துக்கொண்டுதான் சீதையைச் சுயமரியாதைக்காரர்கள் விபசாரி என்று சொல்லுகிறார்களென்று சொல்லுகிறார்கள்.

ஐந்துபேர்கள் பதிவிரதைகளென்றெழுதி அவர்களையே பின்னால் பதிவிரதா தருமம் கெட்டு விட்டவர்களென்று கதையெழுதி யிருக்கிறீர்களே என்றால் அதொரு குற்றமா? எழுதினவர்பேரிலும், அதைபடித்துப் பண்டிதனானவர்கள் பேரிலும், அதைச்சொல்லிவயிறுவளர்க்கிறவர்கள் பேரிலும் குற்றமில்லை. இந்துமதக் கதைகள் இவைதானா என்பது குற்றமா? அதைக்கேட்டவன் நாஸ்திகன் அவனுக்கு ஓட்டுப்போடாதீர்கள் என்பதுதானா ாங்கிரஸ்? இவைதானா இப்பண்டிதர்கள் படித்த தாந்தமும் சித்தாந்தமும்?

இந்த பண்டிதர்கள் ஆஸ்திக சங்கமொன்று ற்படுத்திக்கொண்டு அதற்குப் பின்னாலிருந்து காண்டு, "சீதை விபசாரிஎன்று சொல்லுகி ர்கள் அதைக் கேட்டுக்கொண்டு நீங்களென்ன சய்யப்போகிறீர்கள்?" என்று பிரசங்கம் செய்கி ர்கள். ஆனால் இவர்களுக்கும் சீதைக்கும் சம் மில்லை. ஒருவர் சைவர், மற்றவர் வேதாந்தி. கள் சொல்லும் வார்த்தைகளுக்கு நாங்களும் ழக்கங்களுக்குரியாயங்களை எடுத்துச்சொல்ல ண்டி யிருக்கிறது. அதிலிருந்து நீங்களும் வைகளைத்தெரிந்து பண்டிதர்களின் ஆராய்ச் திறமையைத்தெரிந்து கொள்ளுங்கள்.

ங்கும் வியாபித்திருக்கும் வஸ்து விஷ்ணு. ந்நிறைந்த அந்தப்பொருளைக் காட்டுவது ட்சுமி என்னும் தத்துவார்த்தத்தோடு பார் ல் இராமாயணமுமில்லை, சீதையுமில்லை. யமரியாதைக்காரர்கள் சொன்னதாகச்சொல் ம் விபசார தோஷமுமில்லை. இலட்சுமியை ல்வமென்று சொல்லுவதானாலோ செல்லக்கூடியது, மாறக்கூடியது. செல்வமாகியலட்சுமி எங்கும் நிலைக்கமாட்டாள் என்பது எல்லோருமறிவார்கள். அந்த இலட்சுமி ஒரு சீதையாகமட்டும் பிறப்பதில்லை. உலகத்திலுள்ள பெண்களெல்லாம் இலட்சுமிகளே. அந்த இலட்சுமியின் அம்சம் சிலரிடத்தில் குறைந்தும், சிலரிடத்தில் ஏறியும் காணப்படும். சனகன், தசரதன், ராவணன், யாகசாலை, பூமிமுதலிய இடங்களிலிருந்து சீதை பிறந்தாளென்று ராமாயணங்கள் பலவிதமாகச் சொல்லுகின்றன.

வைகுண்டத்திலிருக்கும் விஷ்ணுவும், இலட்சுமியும் முறையே ராமர் சீதையாக ஏன் பூலோகத்தில் பிறந்தார்கள்? என்பதற்கு சைவ புராணம் சொல்லும்காரணத்தைப்பார்த்தால் சுயமரியாதைக்காரர்கள் சீதையை விபசாரியென்று சொன்னதாகச்சொல்லும் பண்டிதர்களின் புராணங்கள் உத்தரவாதமேயொழிய சுயமரியாதைக் காரர்கள் பொறுப்பாளிகளல்லர்.

ஜலந்தரா சூரனுடைய பெண்ஜாதி பிருந்தை அல்லது விருந்தையின்மேல் அநேகநாளாக ஆசை கொண்டிருந்தார் விஷ்ணு. ஜலந்தரா சூரனைப் பரமசிவம் யுத்தத்தில்கொன்றார். இவனுடலில் விஷ்ணுபுகுந்து சூரனைப்போல வேஷமெடுத்துப் பிருந்தையோடு சுகித்திருந்தார். பிருந்தை அந்தச் சூதைத்தெரிந்து "ஏ பாவி விஷ்ணுவே! என்னுடைய கற்பை நீ அழித்ததினால் நீ மனிதனாகப் பிறந்து உன்னுடைய பெண்ஜாதியை ராக்ஷதன் அபகரித்துக்கொள்ளட்டும்" என்றுசபித்து தான் அக்கினியில் விழுந்துசாம்பலானான். அந்தச் சாம்பலில் விஷ்ணு புரண்டு அழுது கொண்டிருந்தார். அதைத்தெரிந்து பார்வதிதுளபமென்னும் பெண்ணை விஷ்ணுவினிடம் அனுப்பினான். அவளால் விஷ்ணு ஆறுதலடைந்து அவளோடுகூடி யிருந்தார் என்பது சைவத்தின் முக்கிய புராணமான கந்தபுராணத்திலுள்ள கதை.

இந்தக்கதை ஆனந்த ராமாயணத்தில் வேறு மாதிரியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஜலந்தரா சூரனுடன் பரமசிவன் யுத்தம் செய்து அவனை ஜெயிக்கமுடியாமற் போயிற்று. அதற்குஅவனுடைய பெண்ஜாதியின் பதிவிரதாதர்மமே காரணமென்றறிந்து தன் பெண்ஜாதியான பார்வதியை விஷ்ணுவிடத்திலனுப்பி ஏதாவது உபாயம் செய்யச்சொன்னார். தருமத்தை நிலைநிறுத்த அவதாரம்செய்யும் மகாவிஷ்ணு சூரனுடைய ரூபத்தையெடுத்துப் பிருந்தையுடைய பதிவிரதா தர்மத்தை அழித்தார். அதையறிந்த அந்தப்பிருந்தை விஷ்ணுவைக் கடுமையாகச் சபித்தான் என்றிருக்கிறது.

பிருந்தையின் சாபத்தின் கருத்தென்ன? தன் பதிவிரதா தருமம் கெட்டதுபோல் விஷ்ணுவின் பெண்ஜாதியான இலட்சுமியின் பதிவிரதா தருமம் கெடவேண்டுமென்பதுதானே? மும்மூர்த்திகளையும் பதிவிரதா தருமம் குழந்தைகளாக்கிவிட்டதென்று நாம் ஒத்துக்கொண்டோம். பிருந்தையின் பதிவிரதா தர்மத்தால் விஷ்ணு மனிதனாகப் பிறந்ததும் இலட்சுமி சீதையாகப்பிறந்ததும் கேட்டோம். ராக்ஷதன் சீதையை எடுத்துக்கொண்டுபோனதும் ராமர் துக்கப்பட்டதும் படித்தோம். பிருந்தையின்சாபம் இவ்வளவுதூரம் நின்றுவிட்டதா? அதற்குமேலும் சென்றதா? என்பதைப்பற்றிநாங்கள் ஏன் வாதிக்கவேண்டும்; சுயமரியாதைக்காரர்கள் கந்தபுராணத்தை எழுதிக் கலியாணசுந்தரமுதலியார் கையில்கொடுக்கவில்லை. ராமர் தடுத்தும் சீதைகாட்டிற்குப்போனதும் சாந்தலிங்கசுவாமிகளின் மாணுக்கரான குமாரதேவர் நூலுக்கு விரோதம். ஷை தேவர் சைவப் பெரியார். கற்பின் இலட்சணத்திற்கு [illegible] சீதையை நினைத்தது காவிய மணிமேகலைக்குக் குற்றம். மாரீசப்படலத்தில் இலக்குவனைச் சீதை கடுமையாகச் சொன்னது எந்தப்பெண்களுக்கும் விரோதம், ஈஸ்வரனுடைய மகனான அனுமான் சந்தேகப்பட்டதை அல்லவென்று சொன்னால் ஈஸ்வரனுக்குக் குற்றம், சீதையை அனுமான் தன் தோளில் [illegible] சொல்லும் அநீதியின் தன்மையை சூரியன் கற்றுக் கொடுக்காதது அனுமான் குருவான சூரியனுடை குற்றம். கல்லாதகலையும் வேதக்கடலுமான இவன் அனுமான் என்று ராமரே சொல்லியிருக்கையில், அனுமான் நினைத்ததும் சொன்னதும் அனுமான் குற்றமோ அல்லது ராமர் குற்றமோ? சித்திர புத்திரன் மேல் குற்றம் சொல்ல புராணத்திலிடமில்லை. சீதையை ராவணன் துடையையும் மயிரையும் பிடித்துத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டு போனான் என்று வால்மீகி ராமாயணம் சொல்லுவதை முன்னமே பிர்மா சொல்லியிருப்பதாலும், சடாயுவின் தம்பி சம்பாஜி அனுமானிடம் சொன்னதாலும் அது தான் அனுமானுக்குத் தெரியுமேயல்லாமல் பன்னகசாலையோடு பேர்த்துப் போனதாக ஸ்ரீரங்கம் அய்யங்கார்களுக்காக எழுதின கம்பராமாயணம் அந்தக் காலத்தில் அனுமானுக்குத் தெரியாது. இன்னும் பல புராணக் கதைகளும் வண்ணான் பேச்சைக் கேட்டு சீதையைக் காட்டிற்கு அனுப்பின கதை வரையிலும் இங்கு எழுத இடமுமில்லை. அஸ்டமா சித்திகளுமடைந்து திரிகாலமும் உணரும் சக்தி வந்து கல்லாத கலையும் வேதக்கடலுமான அனுமார் கொண்ட சந்தேகத்தில் சுயமரியாதைக் காரர் ஐயங் கொண்டதில் ஒரு ஆச்சரியமுமில்லை.

இதையே ஆதாரமாகக் கொண்டு சுயமரியாதைக்காரர்கள் மேல் பழி போட்டு அதுவே ஆஸ்திகச் சங்கத்திற்கு ஆதாரமென்று நினைக்கிறார்களா? கந்தபுராணத்தைத் தள்ளுகிறார்களா? ஆனந்த ராமாயணத்தை எங்கு ஒளிப்பது? வால்மீகி ராமாயணத்தையும் கம்பராமாயணத்தையும் குற்றம் சொன்னாலும் ஏற்பாட்டிற்கு விரோதமில்லையே! தர்மம் கெட்டு அதர்மம் தலையெடுத்தால் நான் ஒவ்வொரு யுகத்திலும் பிறக்கிறேன் என்று பகவான் சொல்லுகிறார் என்பதை எல்லாரும் சொல்லுகிறார்கள். ராமர் பிறந்தார், அவர் வேலை தீர்ந்தது; கிருஷ்ணன் பிறந்தார், அவர் வேலையும் முடிந்தது. அதற்குப் பின் விஷ்ணு பவுத்தராக அவதாரம் பண்ணினார். அவரும் ராமாயணம் எழுதியிருக்கிறார். அந்த ராமாயணமல்லவோ பிரமாணமாக வேண்டும். பழைய அந்தக்காலம் நமக்கு விசேடமாக விருந்தாலும், அந்தக் காலத்தில் இப்பொழுதுள்ள நாமில்லையே. நமது தரும சாஸ்திரங்களும் விதிகளும் சம்பிரதாயங்களும் உண்டான காலம் எப்பொழுதே போய்விட்டது. பூமியானது பலவித மாறுதல்களையடைந்து விட்டது. ஆத்ம வழி தப்பியவர்கள் உலகத்தில் தங்களிஷ்டம்போலிருந்து கொண்டு முன் காலத்தவர்களுக்கு எழுதப்பட்ட வழக்கத்திலில்லாத பாஷையின் மூலமாகக் கிடைப்பதெல்லாம் தெய்வீகமானதென்றும், சுதந்திர எண்ணங்கள் குற்றமாகக்கருதப்பட வேண்டுமென்றும், அடிமைத்தனத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றுமா கடவுள் சொல்லும் ஆஸ்திகமாகவிருக்கும்? சற்று ஆலோசித்துப் பாருங்கள். அந்த காலத்திலா நாம் வசிக்கிறோம்? நீராவியந்திரங்களும் நீராவிக்கப்பல்களும் நூதனசாஸ்திரிகளுடனும் வேலையாளருடனும் ஐரோப்பா அமெரிக்கா முதலிய தேசங்களுடனும் சேர்ந்து இந்த இருபதாம் நூற்றாண்டின் இடத்திலல்லவா வசிக்கிறோம்? இவர்களுடன் போட்டிக்கும் இவர்கள் சரிசமமாக நம்மை கருதவும் பழய ராமனும் சீதையும் உபயோகமில்லை என்றால் என்ன குற்றம்? இதை மெய்ப்பிக்க சென்னைக்குப் போன மகாநாடும் உங்களுடைய நித்ய லௌகிக வாழ்க்கையுமே உங்களுக்கு எடுத்துச் சொல்லவில்லையா?

உண்மை சமயப்பற்றுடையவர்களாய் ஆசார சீர்திருத்தம் அவசியம் வேண்டுமென்று விரும்புவர்களும், உலகம்போக்கைப் பொது அறிவால் நினைத்து நேர்நடையையுடைய சைவர்களும்

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-ஆரண்ய காண்டம்

(கட்டுரை 2.)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்.)

ஒரு நாள் காலையில் இராமனும் இலக்குவனும் சீதையும் கோதாவரியில் நீராடப் போனார்கள். இலக்குவன் "நல்லவனாகிய பரதனுக்கு தீயவளாகிய கைகேசி எவ்வாறு தாயாக அமைந்தாள்?" என்றான். இராமன் "நல்லவனாகிய பரதனுடைய இனிய மொழிகள் எனக்கு அடிக்கடி நினைவுக்கு வருகின்றன" என்றான். அவர்கள் நீராடி குடிசைக்கு வந்தார்கள். அப்போது இராவணேச்வரனுடைய தங்கையாகிய சூர்ப்பனகை அங்கே வந்து இராமனைக்கண்டு காமுற்று அவர்களை யாரென வினவினள். இராமன் தங்கள் வரலாறு கூறி "இவ்வளவு அழகுடைய நீ அரக்கியாகத்தோன்றவில்லை நீ யாரெ"ன வினவினன். சூர்ப்பனகை தன் வரலாறு கூறி இராமனை நோக்கி "இவ்வழகற்ற பெண்ணோடிருக்கிறாயே! என்னோடு வா நாம் சுகமாகக் கூடிவாழ்வோம். இவளையும் உன் தம்பியையும் நான் கொன்றுவிடுகிறேன்" என்றாள். இராமன் "நான் கல்யாணமானவன்; என் தம்பி பெண் சுகத்தை அறியான்; அவனுக்கு மனைவியில்லை; உன் அழகான உருவத்துக்கு அவனே சரியானவன். அவனை நீ பெற்றால் சக்களத்திக் கவலையில்லாமல் இருக்கலாம்" என்றான். சூர்ப்பனகை இலக்குவனை அடைந்து வேண்ட அவன் "நான் இராமனுக்கு அடிமை. ஆதலின் நீ தலைவனையே மணக்கவேண்டும். சீதையோ விகாரமான உருவுடையவள், கெட்ட நடையுள்ளவள், சரிந்த வயிறுள்ளவள், கிழவி, ஆதலின் நிகரற்ற அழகுள்ள சிறுமியாகிய நீ அவரை அடைதலே நன்று' என்றான். அவள் இராமனை அடைந்து "அழகற்ற, கெட்ட நடையுள்ள, கிழவியான இவளைக் கொன்றுவிடுகிறேன். அப்படியானாலே நீர் என் வசமாவீர்" என்று சீதையைக் கொல்ல ஓடினாள். இராமன் "கெட்டவர்களிடத்தில் விளையாடக்கூடாது. தம்பி! இவளை உருக்குலைத்து விடு" என்றனன். உடனே இலக்குவன் அவளுடைய மூக்கையும் காதுகளையும் அறுத்தான். அவள் ஓடிக் கரனிடம் தெரிவித்தாள். கரன் சினம் கொண்டு தனது பதினான்கு சேனாபதிகளையும் அனுப்பினன். தம்பியைச் சீதைக்கு காவலாக வைத்து இராமன் அவர்களோடு போரிட்டுக்கொன்றான். அதுகண்டு சூர்ப்பனகை கரனிடம் நிகழ்ந்தது கூற, கரன் தூடணனென்ற சேனாதிபதியைப் போர்க்குப் புறப்பட ஏவித்தானும் தேரேறிச் சென்றான். பல தீய நிமித்தங்கள் தோன்றினும் அவன் மனம் கலங்கவில்லை.

சண்டை தொடங்கிற்று. இராமன் எதிரிகளின் போர்க்கருவியால் எல்லா அவயவங்களும் பிளக்கப்பட்டும் வருத்தமடையவில்லை. அவன் நெருங்கிவந்த அரக்கர் பலரையும் அம்பெய்து கொன்றான். அதுகண்டு தூடணன் ஐயாயிரம் வீரரை ஏவினன். இராமன் அவர்களைக் கொன்றதோடு தூடணனையும் பொருது கொன்றான். கரன் பன்னிரு தலைவரையும் பதினாயிரம் வீரரையும் ஏவ அவர்களும் மடிந்தார்கள். திரிசிரசு என்ற தலைவனும் மடிந்தான். கரன் சினந்து வந்து இராமனுடைய வில்லை முறித்துக் கவசத்தைப்பிளந்து அம்புகளால் உறுப்புக்களையெல்லாம் துளைத்தான். உடனே இராமன் அகத்தியன் தந்த வில்லையெடுத்துக் கரனுடைய வில்லையும் தேரையும் அழித்தான். அவன் கரனைப் பார்த்து "பாவியாகிய நீ பல துன்பங்களை முனிவர்களுக்குச் செய்தாய். உங்களைக் கொல்லவே நான் மன்னவரால் காட்டுக்கு அனுப்பப்பட்டேன்" என்றான். கரன் இராமனை இகழ்ந்து தடியால் எறிய அதை இராமன் அழித்தான். இராமன் வெறுங்கையனாய் நின்ற கரனை இகழ்ந்தான். பின் ஓர் அம்பெய்து அவனையும் கொன்றான். அங்கே முனிவர் கூடி இராமனை வாழ்த்தி "இதற்காகவே உன்னைச் சரபங்கர் சுதீக்கணரிடமும் அவர் அகத்தியரிடமும் அனுப்பிக் கரனை அணுகச் செய்தனர். இதற்காகவே இந்திரன் அவர்களைக்கண்டனன். நாங்கள் நினைத்தது முடிந்தது" என்றார்கள். சீதை இராமனைத் தழுவிக்கொண்டாள். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

இலக்குவன் கைகேசியை இகழ்கிறான். இவர்கள் இராமனுக்கு நாட்டைப் பரதன் கொடுத்த பின்னரும் கைகேசியிடம் பகைமை பாராட்டுவது அவர்களுடைய கீழ்மையையே உணர்த்தும். இராமன் பரதனைப் புகழ்கிறான். தனக்குரிய நாடு முழுதையும் கொடுத்த ஒருவனை இராமன் புகழ்வது வியப்பாகாது.

இராமனிடம் சூர்ப்பனகை அழகிய உருவுடன் வருகிறாள். அதைப்பற்றி மொழிபெயர்ப்பாளர் நரசிம்மாச்சாரியார் 1322ம் பக்கத்தில் "சூர்ப்பனகை நினைத்தபடி வடிவம் கொள்ள வல்லவளாகையால் இராமனுக்காக அழகிய உருவம் தரித்திருந்தாள். அவளைக் கவி (வால்மீகி) விகாரரூபமாக வர்ணிப்பது அவளது வாஸ்தவமான ரூபத்தை வர்ணிப்பதற்காக என்று தெரிகிறது" என்று எழுதுகிறார். சூர்ப்பனகை உண்மையில் பேரழகுடையவளே. அவள் இராமாயணக் கதையில் தோன்றுவது அழகுடையவளாகவே. அவளை அழகற்றவளாக வால்மீகி கூறுவதெல்லாம் வகுப்புப் பகைமையாலேயேயாம். நினைத்த உருவங்களையெல்லாம் அவள் எடுத்தாளென்று கூறுவது தமது ஆசைதீர அவளை இகழ்வதற்கேயாம். மேலும் அவள் இராமன் மேலும் இலக்குவன் மேலும் ஆசைகொண்டு வேண்டி அலைந்தாள் என்பதும் இராவணேச்வரனாகிய தமிழ் மகனுக்கு இகழ்ச்சி உண்டாக்குவதற்கேயாம். இராவணன் சீதையைத் தூக்கிச்சென்று பத்து மாதம் சிறைவைத்திருந்த இகழ்ச்சி ஆரியராகிய தமக்கு இவ்வாறு சூர்ப்பனகையை இகழ்ந்துரைத்தலால் தீரும் என்பது இவ்வாரியர்களுடைய கருத்துப்போலும். அதனாலேயே இராவணன் தங்கையாகிய சூர்ப்பனகையை இவ்வளவு கேவலமாக வால்மீகி காட்டுகிறார் போலும்.

இராமன் சூர்ப்பனகையிடம் "இலக்குவன் மணமாகாதவன். பெண்கள் நலமறியாதவன். அதனால் அவனிடம்போ" என்று பொய் புகல்கிறான். இவன் பொய்ம்மையாளர் அனைவருக்கும் தலைவனென்னுமாறு அவ்வளவு பெரும் பொய்யன் என்பதை நாம் முன்னரே பல இடங்களில் நிலைநாட்டி வந்தோம். ஈண்டும் இவன் பொய்ம்மைக்கோர் எடுத்துக்காட்டமைந்தது. ஓர் பெண் தன்னை வலிய அழைக்கவருவாளாயின் தனக்கு விருப்பமில்லாதபோது என்ன செய்யவேண்டும். அவளிடம் தன் விருப்பமில்லாமையைக்கூறி அனுப்பிவிடுவதே ஒழுக்கமுடையார் செயலன்றோ? இராமன் தன் தம்பி மணமில்லாதவனெனப் பொய்கூறி அவளை அவனிடம் அனுப்புகிறான். இந்த இடத்தில் மொழி பெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காரும் ஆரணியகாண்டம் பக்கம் 47ல் "உத்தமநாயகனுடைய லக்ஷணம் வாய்ந்த ராமன் இப்படிப் பரிகாசம் செய்வது நியாயமல்ல. லக்ஷ்மணனைத் தாழ்த்தி உண்மையில்லாத வார்த்தைகளை அவனைப்பற்றிச் சொல்லிச் சூர்ப்பனகையை ஏமாற்றுவதும் உசிதமல்ல" என்று எழுதுகிறார். நமது மொழி பெயர்ப்பாளர் மெய்யறிவு கொண்டவராதலின் வைணவராகிய ஐயங்காராயிருந்தும் இவ்வாறு பல இடங்களிலும் உண்மையை எடுத்துக்காட்டிப் பொய்ம்மையைக் கடிகிறார். தமிழ் மக்களில் அறிவற்ற சிலர் நாம் உண்மைகளையெல்லாம் சத்தியமாக எடுத்துக்காட்டினாலும் நம்ப மறுக்கின்றனர். இவர்தம் அறியாமை என்னென்பது? இவர்களை இவ்வுண்மை வுரைகளைக் கண்டேனும் தெளிவடையுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

இராமன் உயர்குடிப் பிறப்பினனாயினன்றோ? பொய்புகலானாவான்.

இலக்குவன் சீதையைப்பற்றிக் கிழவியென்றும் சரிந்தவயிறுடையவளென்றும் தீயநடையுடையவளென்றும் கூறுகிறான். இது நாம் முன்னர் பூப்பெய்தி மணப்பருவமடைந்து பல ஆண்டுகள் சென்றபின்னரே சிறுவனாகிய இராமன் வயதுக்குமிக மூத்தவளாகிய சீதையை மணக்கிறான் என்று நிலைநாட்டிய உண்மையை மேலும் வலியுறுத்துகின்றது. இலக்குவனே சீதையைக் கிழவியென்றும் தீயநடையுடையவளென்றும் கூறும்செய்தி பொய்யாமா? அன்றி இலக்குவன் பொய்யனாதல்வேண்டும். ஆனால் இலக்குவன் கூறியாங்கே சூர்ப்பனகையும் இராமனிடம் சீதையைக்கிழவி என்கின்றனள். ஆதலின் சீதை தோற்றத்தில் வயது முதிர்ந்தவளாகவே காணப்பட்டிருத்தல் வேண்டும்.

சீதையைச் சூர்ப்பனகை தாக்க வந்தபோது இராமன் "தம்பி! ஏன் இவளிடம் விளையாடுகிறாய்!" என்கிறான். இவ்விடத்தில் நமது சீனிவாசய்யங்கார்குறிப்பு கவனிக்கத்தக்கது. அவர் பக்கம் 48ல் "தானே அப்படி ஏன் செய்தாரென்று விளங்கவில்லை" என்றுகுறிக்கிறார். தனக்கொரு நீதியும் பிறர்க்கொரு நீதியும் பேசும் இராமனைப் போலும் தீயவரும் உளராவரோ? மிகத்தளர்ந்த கிழவியாகிய தாடகையை கூசாது கொன்ற சுத்த வீரனென்ற பாராட்டப்படும் இராமன் தன் தம்பியை நோக்கி "அவளை உருக்குலை" என்று கட்டளையிடுகிறான். இத்தகைய வீரர்கள் இவ்வுலகெங்கணுமே காணப்பெறார்! அண்ணன் வாய்கூசாது கட்டளையிடத் தம்பி கைகூசாது சூர்ப்பனகையின் மூக்கையும் காதுகளையும் அறுத்துவிடுகிறான். இப்பாபிகளின் இழிசெயல்களை என்னென்பது? அறிவாளிகளான தமிழ்ப்பெரியோர்களே! இத்தீயசெயல் பெண்களிடம்பிறந்த மக்களுக்கு ஏற்றதாமா? இவ்வாறு உருக்குலைத்து அவளை உலகில் சீரழிய விடுவதிலும் கொன்றிருத்தல்மிக மேலான செயலாமன்றோ? இராமனும் இலக்குவனும் பல மனைவியருடனிருந்தவர்களென்றும், அந்நிய ஆடவர்களாகிய புரோகிதருடன்கூடிய பெண்களாகிய வியபிசாரிகள் பெற்றபிள்ளைகளென்பதும் முன்னரே பல இடங்களில் நிலை நாட்டினோம். ஆதலின் இத்தகைய இழிபிறப்பாளராகிய ஒழுக்கங்கெட்ட இராமனும் இலக்குவனும் மிகச்சிறந்த அழகோடு தோன்றிய சூர்ப்பனகையை அவள் வலியவேண்டும்போது கூட மறுத்தனரென்பது அறிவுக்கு ஒவ்வாததாயிருக்கின்றது. உலக இயற்கைக்கும் மாறாயுள்ளது. ஆதலின் இக்கதை ஆரியர்களாலும், நாம் முன்குறித்தபடி வேண்டுமென்று கட்டிவிட்டதாகவே இருத்தல் வேண்டும் என்பதற்கு என்னே தடையுளது?

இராமன் தூடணனையும் திரிசிரசையும் ஏனையஅரக்கரையும் கொன்று கரனோடு போரிடும்போது அவனைநோக்கி "அரக்கரை கொல்லவே நான் மன்னவரால் காட்டுக்கு அனுப்பப்பட்டேன்" என்று வாய்கூசாமல் பொய்பேசுகிறான். பொய்ம்மையே ஓர் உருவினனாகிய இராமன் இவ்வாறு கூறுவது இயல்பேயாமன்றி வியப்பாகாது. இந்தஇடத்தில் மொழிபெயர்ப்பாளர் சீனிவாசய்யங்காரும் பக்கம் 69ல் "இப்படித்தசரதர் சொன்னதாகத் தெரியவில்லை" என்று குறிக்கிறார். தசரதன் அக்கிரமமாக உரிமையற்ற

(இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

# மூன்றாவது நாடார் வாலிபர் மகாநாடு.

30—4—29-ம் தேதியில் பிறையாற்றில் திரு. ஈ. வெ. இராமசாமி அவர்கள் தலைமையின்கீழ் நாடார் வாலிபர்களின் 3-வது மகாநாடு நடைபெற்றது. அப்போது அவர்கள் நிகழ்த்திய முன்னுரைச் சொற்பொழிவின் சாரமாவது:—

சகோதரர்களே! நமது நாட்டினுடைய முன்னேற்றத்தைக் கருதிய விஷயங்களிலே வாலிப மகாநாடுகளைப்பற்றி ஒருவிதமான அபிப்பிராய பேதமும் கிடையாது. ஏனென்றால் உலக முன்னேற்றத்திற்கே காரணம் வாலிபர்கள்தான். அதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவர். ஒவ்வொருநாட்டிலும் பல வகையிலும் அடிக்கடி கஷ்டம் நிகழ்ந்திருக்கின்றது. அவை விடுதலைபெற சுயமரியாதை அல்லது விடுதலைஉணர்ச்சி வாலிபர்களுக்கு ஏற்பட்டதின்மூலம் உலகத்தின் பெரும்பான்மையான நாடுகள் விடுதலையடைந்திருக்கின்றன. இந்தியாவைத்தவிர மற்ற எல்லா நாடுகளும் முன்னேறி வருகின்றன. ஏன் நமது நாடுமட்டும் தூங்குகிறது? வாலிபர்கள் கவலை எடுக்காததினால்தான், நாம் இதுகாறும் பாடுபட்டும் பிரயோஜனமில்லாமல் முன்னிருந்த நிலையில்தான் இருக்கின்றோம். எப்படி மற்றநாட்டு வாலிபர்கள் தத்தம் நாடுமுன்னேற உயிர்விட்டுக்கூட உழைத்தார்களோ அதுபோல் நமது வாலிபர்களும் உழைக்க முன்வரவேண்டும்.

சுயமரியாதை உணர்ச்சியை வாயளவில் மறுக்கின்றார்களேதவிர சுயமரியாதைக் கொள்கைகளையும் திட்டத்தையும் எல்லோரும் ஒப்புக்கொள்கின்றார்கள். சுயமரியாதை உணர்ச்சி தப்பிதமானதென்று சொல்லுகின்றவர்கள் எவரும் இதுவரை நமது கொள்கைகளில் இன்ன இடத்தில் இன்ன பிசகு இருக்கிறது என்றுசொல்ல யாரும் முன்வரவில்லை. அவர்கள் இவ்வளவுவேகம் கூடாது, சுமாராயிருக்கவேண்டுமென்கிறார்களே ஒழிய அடியோடு தப்புஎன்று கூறுபவர்கள் கிடையாது. ஆனால், சில சுயநலவாதிகள் எலக்ஷன் சமயத்தில், சுயமரியாதை இயக்கம் உலகத்தையே பாழ்படுத்தப் போகிறது, நாஸ்திக பிரசாரம் செய்கின்றது என்று கூறி விஷமப்பிரசாரம் செய்கின்றனர். இதைப்பற்றி கண்ணியமாய் அபிப்பிராயப்பேதப்படுப்பவர்கட்கு நாம் சமாதானம் சொல்லலாம், மற்றவர்கட்கு நாம் நியாயம் சொல்லவேண்டியதில்லை. அவர்களை சமாதானப்படுத்த முடியாது. நாம் ஒற்றுமையுடனும், விடாமுயற்சியுடனும் பாடுபடுவதுதான் அவர்கட்குத் தக்கபதில் ஆகும். சுயமரியாதை இயக்கமானது நம்நாட்டிற்கும் உலகத்திற்கும் புதிதல்ல. முக்கியமாக கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறவர்கட்கும் அடிமைப்படுத்தப்பட்டவர்கட்கும் தாழ்த்தப்பட்டவர்கட்கும் சுயமரியாதை இயக்கந்தவிர வேறு இயக்கம் கிடையாது. ஒவ்வொரு நாடும் சுயமரியாதைக் கிளர்ச்சியினால்தான் முன்னுக்கு வந்திருக்கின்றன. சுயமரியாதை உணர்ச்சியே சமயம், சமூகம், ஆத்மார்த்தம், அரசியல், பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைக்கும் மார்க்கமாகும். ஐரோப்பா தேசத்திலே, ஆத்மார்த்த சம்பந்தமாக அடிமைப்பட்டு அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்த மக்கள் மார்ட்டின்லூதர்போன்ற பெரியார்களின் சுயமரியாதைக் கிளர்ச்சியினால்தான் கண்விழித்து எழுந்து இப்போது உலகத்திலே தலைசிறந்து விளங்குகின்றனர், காட்டுமிராண்டிகளாக இருந்த அவர்கள் இப்போது முன்னேற்றப்போட்டியில் முன்னணியிலிருக்கின்றனர். அவர்கள் மதசம்பந்தமான மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்த பிறகே சயன்ஸ்முறைகளைக் கண்டுபிடித்து முன்னேறி வருகிறார்கள். நம் புரோகிதக் கொடுமையைவிட அவர்கள் புரோகிதர்களால் பட்ட கொடுமையும், பழக்கக் கட்டுகளுக்குக் கட்டுப்பட்ட அடிமைத்தனமும் இப்போது பறந்துபோய்விட்டன. அதுபோலவே ருஷியாமுதலிய இடங்களில் பொருளாதார விஷயத்தில் சுயமரியாதை உணர்ச்சி உண்டானதினால்தான் அவர்கள் பொதுஉடமை இயக்கம் தோற்றுவித்தனர். நமது அரசாங்கம் அவ்வியக்கத்தை (போல்ஷ்விக்மசோதா) நமது நாட்டில் பரவவிடாமல்செய்ய சட்டம்செய்ய முயலுகின்றார்கள். மேலும் துருக்கியில் சமுதாய சுயமரியாதை உணர்ச்சி உண்டானதினால் வெள்ளைக்காரர்கள்கூட பயப்படுகின்ற முறையில் அவர்கள் முன்னேறி வருகின்றார்கள். அயர்லாந்துக் காரர்களுக்கு அரசியல் சுயமரியாதை உணர்ச்சி உண்டான பிறகுதான் அவர்கள் விடுதலை பெற்றார்கள். ஜப்பான், சைனா முதலியநாடுகள் முன்னுக்கு வந்திருக்கின்றன. சமுதாயம், அரசியல், பொருளாதாரம், ஆத்மார்த்தம், அறிவு ஆகிய எல்லாவிஷயத்திலும் நாம் சுயமரியாதை அற்று இருக்கின்றோம் என்பதில் சந்தேகமில்லை. பொருளாதார விஷயத்தில் சுயமரியாதை அற்ற தன்மைக்கு நற்சாட்சி வேண்டுமானால் கூலிகள் வெளிநாடுகட்குச் செல்லுவதே போதும். அதாவது ஒவ்வொருவாரமும் பதினாயிரக்கணக்கான நமது சகோதரர்கள் மோரிசு, நேட்டால், தென் ஆப்பிரிகா ஆகிய இடங்களுக்கு பிள்ளைகுட்டி பெண்டுகளுடன் சென்று மானங்கெட்டுச் சாகிறார்கள். ஆத்மார்த்த விஷயத்தில் சுயமரியாதையற்ற தன்மைக்குச் சாட்சி வேண்டுமானால் மோக்ஷவதிற்கென்று பார்ப்பான் காலில்விழுந்து அவன் காலைக்கழுவின தண்ணீரைப் "பாததீர்த்தம்" என்று பருகுவதினாலேயே விளங்கும். அரசியல் சுயமரியாதைஅற்ற தன்மைக்கு ஆதாரம் வேண்டுமானால், நமது அரசியல் பிரதிநிதிகளாக பார்ப்பனர்கள் இருந்துகொண்டு சில வயிற்றுப்பிழைப்புக் கூலிகள் நம்மை ஏமாற்றி வருவதே போதுமானது சமூகவிஷயத்தில் நமக்குச் சுயமரியாதை இல்லை என்பதற்கு நாம் சூத்திரர்கள் என்றும், பஞ்சமர்கள் என்றும் அழைக்கப்படுவதும், கோயில், தெருவு, குளம், பள்ளிக்கூடம் ஆகிய இடங்களில் நமக்குச் சமவுரிமை இல்லாததே போதுமானதாகும். ஆகவே, நமக்கு எத்தத்துறையிலும் சுயமரியாதை இல்லை. ஆதலால் இவைகளில் சுயமரியாதை அடைய ஓர் இயக்கம் அவசியமா? இல்லையா? என நீங்களே யோசியுங்கள். சுயமரியாதை வேண்டும் என்ற அளவில் ஒருவருக்கும் சந்தேகம்இல்லை, அதை என்றும் எல்லோரும் விரும்புகின்றார்கள் என்பதும் எனக்குத்தெரியும். அதனால்தான் எனக்கு எவ்வளவோ எதிர்ப்புகள் இருந்தும், இந்த இயக்கத்திலேயே பிராணனை விடவேண்டும் (கைதட்டுதல்) என்ற எண்ணத்துடன்தான் இடைவிடாமல் உழைக்க முன்வந்தேன். அதற்கு உங்களைப்போல பல வாலிபர்கள் உயிர்விடவும் தயாராயிருப்பதாகவும் எனக்கு நன்றாகத்தெரியும். என்னைவிட அவர்கட்கு நன்றாக இந்த உணர்ச்சி பிடித்துவிட்டது. ஆதலால் நான் வாலிபர்கட்கு இதைப்பற்றி ஒன்றும் அதிகமாகக் கூறவேண்டிய தோன்றுமில்லை. ஒற்றுமையாக இருங்கள், பதட்டம் கூடாது, நமது எதிரிகள்மீது ஆத்திரப்படாதீர்கள் என்றுதான் நான் சொல்லவேண்டியவனாக இருக்கின்றேன். சுயமரியாதை இயக்கத்தைப் பற்றி பலர் பலவிதமாகச் சொன்னாலும், நாடார் குலத்திலேயே சில எதிர்ப்புகள் இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. எப்படி இருக்கமுடியும் என்பது எனக்கு விளங்கவில்லை. இன்றைய மகாநாட்டில் காலையில் நாடார் பிரமுகர்களும் மற்றவர்களும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளையெல்லாம் தீர்மானமாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதாவது அறிவுக்கும் இயற்கைக்கும் நியாயத்திற்கும் ஒத்தவற்றைத்தான் ஒப்புக்கொள்ளுவது என்று தீர்மானித்திருக்கிறார்கள். நான் சொல்லுவதில் செய்வதில் ஏதாகிலும் ஒரு சிறிய விஷயமாவது அறிவிற்கும் இயற்கைக்கும் நியாயத்திற்கும் விரோதமாயிருக்கிறது என்று எடுத்துக்காட்டினால் நான் தூக்குப்போட்டுச் சாகத் தயாராயிருக்கிறேன். சுயமரியாதை இயக்கமானது அறிவு, ஆராய்ச்சி, இயற்கை, நியாயம் ஆகியவைகளையே அடிப்படையாகக் கொண்டது. எனவே, அறிவு, ஆராய்ச்சி இயற்கை தத்துவத்திற்கு இடம்கொடுத்தால் வேறு மூட பழக்கங்கட்கு தானாகவே இடம் இல்லாமல்போய்விடும். அடுத்தபடியாக நாடார் மகாநாட்டில் நமது நாட்டின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் இடையூறாக இருக்கும்படியானதை நீக்க பெண்கட்கு ஆண்களைப்போல் சமவுரிமை கொடுக்கவேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறார்கள். இது சுயமரியாதை இயக்கத்தின் ஜீவாதாரமான கொள்கையாகும். செங்கற்பட்டு மகாநாட்டுப்பெண்கள் சம்பந்தமான தீர்மானம் இதுதான். புருஷன் தாசிவீட்டுக்குப்போவது குற்றமில்லையானால் ஸ்திரீகள் ஆசைநாயகன் வீட்டுக்குப்போவது குற்றமில்லை. புருஷன் பலபெண்களை மணந்தால் ஸ்திரீகள் பல புருஷர்களை மணப்பது குற்றமில்லை என்பதுதான் சமவுரிமை என்பதில் அடங்கியது. எனவே நாடார் மகாநாட்டுத் தீர்மானங்கள் சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானங்கட்குச் சற்றும் இளைத்தவையல்லவென்றே சொல்லுவேன். மற்றும் சுயமரியாதை இயக்கம் கடவுளை மதத்தைப் புராணங்களைப் பழக்க வழக்கங்களைக் குற்றம் சொல்லுகிறது என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவைகளை எந்த அளவில் குற்றம்

கூறுகிறது என்று யோசிக்கவேண்டும். யாராவது இன்றுவரை நான் கடவுளைப்பற்றியும், மதத்தைப்பற்றியும், புராணத்தைப் பற்றியும் எழுதி வருவதைப் பற்றியாவது பேசி வருவதைப்பற்றியாவது குறிப்பிட்டு எடுத்துக்காட்டி சமாதானம் சொல்ல முன்வந்திருக்கிறார்களா? அல்லது இனியாவது சொல்ல முடியுமா என்று கேட்கின்றேன். எனக்குத் தெரிந்தவரை யாரும் இதுவரை எடுத்துக்காட்டக்காணோம். கடவுள் இருக்கின்றது அல்லது இல்லை என்று வாதிடுவது அர்த்தமற்றதாகும்' அன்றியும் அது சுலபமான விவகாரமல்ல, இருக்கிறது என்று நிரூபிப்பதைவிட இல்லை என்று நிரூபிப்பவர்களுக்குக் கஷ்டம் அதிகம்.

சகோதரர்களே! இதுவரை நம்மைப் பற்றி குற்றம் கூறுகின்றவர்களை ஒன்று கேட்கின்றேன். அதாவது 'நான் கடவுள் இல்லை என்று சொல்லுவதாக நினைத்துக் கொண்டு கஷ்டப்படுகின்ற சிகாமணிகளே! கடவுள் என்றால் என்ன? நீங்கள் எதைக் கடவுள் என்கிறீர்கள்? அதற்கு நீங்கள் ஏற்படுத்திக்கொண்டு இருக்கும் குணமும், தன்மையும் என்ன? என்பதை முதலில் சொல்லுங்கள். பிறகு நான் அப்படிப்பட்ட கடவுள் உண்டா இல்லையா என்பதைப் பற்றியும், அதற்கும் உங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? என்பதைப் பற்றியும், அதனால் உங்களுக்கு என்ன பயன் உண்டாகும் என்பதைப் பற்றியும் சொல்லுகிறேன்" என்பதுதான். சகோதரர்களே என்னை நாஸ்திகன் என்று சொல்லுகின்ற சில "ஆஸ்திகக்" குடுக்கைகளைப்பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும். இவர்களில் கடவுளுக்கு அர்த்தம் சொன்ன ஒருவர் சமுத்திரந்தான் கடவுள், ஆறுதான் கடவுள், மலைதான் கடவுள், மரம்தான் கடவுள், புஷ்பம்தான் கடவுள், துளிர்கள்தான் கடவுள் என்று கூறுகிறார். அப்படியானால் நான் இந்த மாதிரிக் கடவுள் இல்லை என்று சொன்னால் மரம் வளராதா? மலை மண்ணாய் விடுமா? ஆறு மேடாய் விடுமா? புஷ்பம் வாசனை இருக்காதா? இந்தக் கடவுளைக் காப்பாற்ற வக்கீல் வேண்டுமா? ஆஸ்திகச் சங்கம் வேண்டுமா? 63 நாயனார் அவதாரம் வேண்டுமா? என்று கேட்கின்றேன். சைவப்பெரியார் கூட்டத்திலுங்கூட மனித வாழ்க்கைக்கும் ஒழுக்கத்திற்கும் கடவுள் உணர்ச்சி வேண்டுவது தான் என்று தீர்மானித்தார்களே யன்றி, கடவுள் உண்டு இல்லை என்று தீர்மானிக்க அவர்களுக்கு ஆதாரமும் தைரியமும் உண்டாகவில்லையே. ஒழுக்கத்திற்கு வேறு சாதனம் இருந்தால் கடவுள் உணர்ச்சி எதற்காக? என்றால் இவர்கள் என்ன பதில்சொல்லுவார்கள். பணம் திருடக்கூடாததற்கு கடவுள் பேரைச் சொல்லி ஒழுக்கம் உண்டாக்கி இருப்பதைவிட, போலீசுக்காரனை வைத்து இருப்பதாலும், திருடினவனைத் தண்டிப்பதாலும் திருட்டுக் குறைந்திருக்கின்றது என்பதை ஒப்புக்கொள்கின்றீர்களா? இல்லையா? என்று கேட்கிறேன். நமது நாட்டில் ஒழுக்க ஈனத்திற்குக் காரணம் அர்த்தமற்ற முறையில் கடவுளைக் கட்டிக்கொண்டழுவதுதான். உண்மைக் கடவுள் ஒழுக்கம் மற்ற ஜீவன்களை இம்சைப் படுத்தக்கூடாது என்பதுதான் என்று உணர்வானானால் நாட்டில் ஒழுக்கமும், அன்பும், இரக்கமும் எவ்வளவு தாண்டவமாடுமென்பதை நினைத்துப் பாருங்கள். குழந்தைப் பருவத்தில் அக்குழந்தை தன்னை காப்பாற்றிக்கொள்ள முடியாத காலத்தில், பெற்றோர்கள் அதைக் காப்பாற்றுவதற்காக வெளியில் போகாமல் இருக்கச் செய்வதற்காக அதற்குச் சற்று பயம் கொடுக்கவேண்டி பூச்சாண்டி இருக்கிறது என்று சொல்வது போல் கடவுள் உணர்ச்சியும் வேண்டும் என்றால் நான் அடியோடு கூடாது என்று சொல்லப்போவதில்லை. ஆனால் அது 6 வயதாகிய பின் நாம் அதைப் பள்ளிக்கூடத்திற்குப் போகச் சொன்னால் அது பூச்சாண்டி பிடித்துக் கொள்ளுவான், நான் வெளியில் போக மாட்டேன் என்று சொல்லிக்கொண்டு அழுதால் நாம் என்ன சமாதானம் சொல்லுவோம்? தலையைப் பார்த்து இரண்டு குட்டு வைத்து கையைப் பிடித்து இழுத்து, பூச்சாண்டி இல்லை, ஒன்றும் இல்லை என்று சொல்லி வெளியில் தள்ளிவிட மாட்டோமா? என்பதை நினைத்துப் பாருங்கள். அது போலவே ஒரு காலத்தில் மக்களைப் பயப்படுத்த பொய் மிரட்டிலும் பயமும் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றபின் கடவுள் பயத்தை நீக்கி உண்மையும் ஒழுக்கமும் ஆகிய தத்துவங்களைச் சொல்லிக்காட்டவேண்டாமா? என்று கேட்கிறேன். அன்றியும் கடவுள் பக்தியும், கடவுள் தன்மை அறிந்த ஞானமும் இருப்பதாச் சொல்லிக்கொண்டு திரியும் ஆயிரத்தில் ஒருவன்கூட யோக்கியனாகவும், ஒழுக்கமுள்ளவனாகவும் இருப்பதை நான் பார்க்கவேயில்லை. உதாரணமாக மடாதிபதிகளையும், ஆஸ்திகப் பிரசாரகர்களையும், சைவப் பண்டிதர்களையும், வைணவ பாகவதர்களையும் சற்று ஞாபகப்படுத்திப் பாருங்கள். அவர்களிடம் இதுவரை கடவுள் பெயரால் கணக்கற்ற ஒழுக்கவீனங்கள் இருப்பது கண்கூடு. ஒவ்வொரு துறைகளிலும் அவர்களது கூடா ஒழுக்கம் சொல்லித் தீராது என்று சொல்லவேண்டி இருக்கிறது. தவிர எது செய்தாலும் கடவுள் செயல் என நினைப்பதினால் ஒருவனுடைய சொந்த முயற்சி குன்றி சோமபேறியாவதற்கு இடமுண்டாய் விடுகின்றது. தன் முயற்சி உடைய உலகம் தான் முன்னேற்றமடையும். முயற்சி இல்லாத காரணத்தினாலேயே நம் தேசம் இந்நிலையிலிருக்கிறது.

குறிப்பாக நமது நாடு மிகவும் கேவல நிலையிலிருக்கின்றது. பொறுப்பற்ற வீணர்கள் வீண் வார்த்தையாடவே சுயமரியாதை இயக்கத்தைத் தூஷிக்கின்றனரே அன்றி நாட்டின் முன்னேற்றத்திற்கோ, அறிவின் முன்னேற்றத்திற்கோ ஒழுக்கத்தின் முன்னேற்றத்திற்கோ இதுவரை ஒரு சிறு காரியமும் செய்தவர்களல்லர். ஒரு சிறு தியாகமும் செய்தவர்களல்லர். தவிர பூசைக்காகக் கடவுளுக்கு காசுசெலவு செய்யாதவர்கள் எல்லாம் நாஸ்திகர் என்று சிலரால் சொல்லப்படுகின்றது. அப்படியானால் மகமதியர்கள் எல்லாம் நாஸ்திகர்களா? அவர்களை கடவுள் காப்பாற்றவில்லையா? கடவுளுக்குக் காசு செலவு செய்யும் பூசை எதற்கு? அதற்கு வயிறு, பெண்டு, பிள்ளை, கல்யாணம், சாந்திமுகூர்த்தம் முதலியவைகள் உண்டா? அவசியமா? அவசியம் என்பீர்களானால் அப்படிப்பட்ட சாமி நமக்குக் கண்டிப்பாக வேண்டாமென்பதோடு அப்படிப்பட்ட சாமி இருக்கமுடியாது என்றும், இருந்தாலும் நாம் அதை காப்பாற்றமுடியாது என்றுமே சொல்லுகின்றோம். ஏனெனில், இப்படிப்பட்ட தேவையும் சுயநலமும் உள்ள சாமிகள் நமக்கு என்ன நன்மைகளைச் செய்துவிடமுடியும்? இவ்வளவு பணச்செலவில் பூசையும் உற்சவமும் பெற்ற கடவுள்கள் இதுவரை நமது மக்களில் 100க்கு 6 பேரைக்கூட படிக்கவைக்கவில்லையே. கிறிஸ்துவர்களும் வெள்ளைக்காரர்களும் கடவுள் பூசைக்கு தேங்காய் பழம் உற்சவம் செய்யாமல் எவ்வளவு தர்மம் செய்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியாதா?

நமது நாட்டில் உள்ள பிரசவ ஆஸ்பத்திரியும், க்ஷயரோக ஆஸ்பத்திரியும், குஷ்டரோக ஆஸ்பத்திரியும், கண் ஆஸ்பத்திரியும், கைத்தொழில் பள்ளிக்கூடமும், சர்வகலாசாலையும், அநாதை ஆஸ்ரமமும், தாழ்த்தப்பட்ட மக்களுக்குச் சாப்பாடு, கல்வி, கைத்தொழில் கற்பிக்கும் ஆஸ்ரமங்களும் இவைபோன்ற சிறந்தவைகளெல்லாம் அவர்களுடையவையாகவே இருக்கின்றன. நாம் அவர்களை வைதுகொண்டும், பழித்துக்கொண்டும் அவற்றின் பலன்களை மாத்திரம் அனுபவித்துக்கொண்டே வருகின்றோம். ஆனால், அதைவிட அதிகமான பொருள்களைச் சாமி பூசைக்குச் செலவழித்து விட்டு அந்தச் சாமிகளால் ஒரு பலனும் அடையாமல் நாமும் மூடர்களாயிருக்கின்றோம். அந்தச் சாமிகளும் கல்லுபோல் அசையாமல் அதே இடத்தில் இருந்துகொண்டு ஒரு நற்பலனும் உண்டாக்காமல் இருக்கிறது. தவிர நாம் புராணங்களையும் மத ஆதாரங்களையும் குற்றம் சொல்லுகின்றோமாம்.

நாம் மனிதனின் ஒழுக்கத்திற்கும், முன்னேற்றத்திற்கும் அறிவுப்பொருத்தத்திற்கும் உதவி செய்யக்கூடிய எந்தப் புராணங்களையும் வேண்டாமென்று சொல்லவில்லை.

நமது நாட்டையும், அறிவு வளர்ச்சியையும், ஒழுக்கத்தையும் பாழ்படுத்தியது நமது புராணங்களும், அவற்றைப் பிரசங்கம் செய்வதையும் அச்சுப்போட்டு விற்பதையும் வயிற்றுப்பிழைப்பாகக்கொண்ட பண்டிதர்களும் புஸ்தகக்கடைக்காரர்களுமே ஆவார்கள்.

---

## துத்திகுளம் ஆதிதிராவிட மகாநாடு

20-4-29-உ நாமக்கல் தாலூகா துத்திகுளம் கந்தனூர்மட மைதானத்தில் அமைக்கப் பெற்ற கொட்டகையில் ஸ்ரீ சுவாமி சகஜானந்தம் எம். எல். சி. அவர்கள் தலைமையின் கீழ் ஆதிதிராவிட மகாநாடு கூடிற்று. ஸ்ரீமான் வி. ஐ. முனிசாமி பிள்ளை எம். எல். சி. அவர்கள் மகாநாட்டைத் திறந்துவைத்தார்கள். சமூக முன்னேற்ற சம்பந்தமான பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று திரு. ஆர். வாதப்பன் அறிவிக்கிறார்.

# திருவாங்கூரில் S. N. D. P. யோகம்.

## சுயமரியாதை மகாநாடு ஆலயப்பிரவேச மகாநாடு.

சுயமரியாதைக் கொள்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டன.

## மாளவியாஜீயின் குட்டு வெளியாதல்.

திருவாங்கூர் சமஸ்தானம் சுமார் 40 லக்ஷம் ஜனங்களைக்கொண்டது. இதில்கிறிஸ்தவர்கள் சுமார் 15 லக்ஷமும், மகமதியர்கள் சுமார் 4 லக்ஷமும் போக மீதி உள்ள சுமார் 21 லக்ஷம் இந்துக்கள் என்பவர்களில் 10 ஆயிரம் நம்பூதரிகளும் 40 ஆயிரம் தென்னாட்டுப் பார்ப்பனர்களும் சேர்ந்து அரை லக்ஷம் பார்ப்பனர்களும், ஏழரை லக்ஷம் நாயர்களும் போக பாக்கி 13 லக்ஷம் ஜனத்தொகையும் தீண்டாத வகுப்பைச் சேர்ந்தது என்று ஒதுக்கித்தள்ளப்பட்டவர்கள். இந்தக்கூட்டத்தில் சுமார் ஏழரை லக்ஷம் ஜனத்தொகை கொண்ட ஈழவ சமூகமும் (அதாவது பிரிட்டிஷ் மலையாளத்தில் தீயர்கள் என்று சொல்லப்படுபவர்கள்) மற்றும் அந்த சமஸ்தானத்தில் உள்ள ஆசாரிகள், வாணியர்கள், நாடார்கள் என்று சொல்லப்படும் சுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் கொண்ட சமூகங்களும் சேர்ந்ததாகும். இது தவிர வண்ணார் வல்லயர் முதலியவர்களும், மற்றும் புலையர் உள்ளாடர் செரமாக்கள் முதலியவர்களும் ஆக அந்த சமஸ்தானத்தில் உள்ள மொத்தம் ஜனத்தொகை நாற்பது லக்ஷத்தில் ஏறக்குறைய பகுதி கிறிஸ்தவ மகமதிய மதத்தைச் சேர்ந்தவர்களும் பகுதியில் சற்றேறக்குறைய மூன்றில் இரண்டு பாகம் தீண்டாதவர்கள், பக்கத்தில் வரக்கூடாதவர்கள், தெருவில் நடக்காதவர்கள், கண்ணில் தென்படாதவர்கள் என்பது போன்ற கொடுமைப் படுத்தப்பட்டவர்கள் ஆவார்கள்.

எனவே மேற்கண்டபடி தீண்டப்படாதவர்கள் என்று கொடுமைப்படுத்தப்பட்டவர்களில் சேர்க்கப்பட்ட மொத்த ஜனத் தொகையில் பகுதிக்கு மேற்பட்ட சமூகமாகிய ஈழவ சமூகமானது அச்சமூக முன்னேற்றத்திற்கு உழைத்துவந்து சமீபத்தில் காலம் சென்ற ஸ்ரீநாராயண குருசாமிகளின் உழைப்பால் சுமார் 40, 50 வருஷ காலமாக நாளுக்கு நாள முன்னேறிவந்து இப்போது அந்த சமூகத்தில் தென்னாட்டில் உள்ள பொது ஜனங்களின் கல்வி விகிதத்தைவிட அதிகமாக ஆண்களும் பெண்களும் படித்தும் மற்றும் எல்லாத் துறைகளிலும் முன்னேறியும் இருக்கின்றார்கள். இந்தச் சமூகத்திற்கு என்று வருஷாவருஷம் சமூக மகாநாடுகளும் கூட்டப்பட்டு வருகிருக்கின்றன. அந்த முறையில் இவ்வருஷமும் ஈழுவ சமுதாய 26வது மகாநாடு கோட்டயத்தில் மைசூர் சமஸ்தான சுகாதார அதிகாரியாயிருந்து பென்ஷன்பெற்ற திரு. டாக்டர் பல்ப்பு அவர்கள் தலைமையில் கூட்டப்பட்டது, அதோடு கூடவே ஈரோடு திரு. ஈ. வெ. இராமசாமியாரின் தலைமையில் சுயமரியாதை மகாநாடும், திரு. பண்டித மாளவியா அவர்கள் தலைமையில் ஆலயப் பிரவேச மகாநாடும், மிஸ்ஸஸ் சீனிவாசன் தலைமையில் ஸ்திரீகள் மகாநாடும் கூட்டப்பட்டன. கூட்டத்துக்கு சுமார் பதினாயிரம் மக்களுக்குமேலாகவே வந்திருந்தது குறிப்பிடத்தக்கது.

6-ந்தேதி திருவாளர் டாக்டர் பல்ப்பு அவர்கள் தலைமை வகித்து, தலைமை உரையில் தங்கள் சமூகத்திற்கு உள்ள கஷ்டத்தை எடுத்துக்காட்டி அதன் எதிரிகளைக் கண்டித்து மக்களுக்கு மதத்தைவிட சுயமரியாதையும், சுதந்திரமும், சமத்துவமுமே பிரதானம் என்றும், அதற்கு எதிரிடையான எதையும் லக்ஷியம் செய்யக்கூடாதுஎன்றும்வலியுறுத்திக் கூறினார்.

### ஸ்திரீகள் மகா நாடு.

7தேதி பகல் 2 மணிக்கு ஸ்திரீகள் மகாநாடு மிஸ்ஸஸ் சீனிவாசன் அவர்கள் தலைமையில் நடந்தது. அக்கிராசனர் சுயமரியாதை இயக்கத்தைவிட ஸ்திரீகளுக்கு வேறு கதி இல்லை என்றும் அந்தக் கொள்கைகளை ஒவ்வொருவரும் உறுதியாய் இருந்து பின்பற்ற வேண்டுமென்றும் சொன்னார்.

### சுயமரியாதை மகாநாடு.

### ஈ. வெ. ராமசாமியாரின் சொற்பெருக்கு.

மறுநாள் திரு ராமசாமியார் சுயமரியாதை மகாநாட்டில் தலைமைவகித்து, இப்போதுஉங்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் தீண்டாமை என்பது ஆகாயத்திலிருந்தோ மக்கள் பிறக்கும்பொழுது தாய் வயிற்றிலிருந்தோ உண்டாய் விடவில்லை என்றும், மதத்தினாலும், கடவுளினாலும், கோவிலினாலும் வேத புராணங்களினாலுமே உண்டாயிற்றென்றும், தீண்டாமை ஒழியவேண்டுமானால் அதை வலியுறுத்தும் மதங்களும், கடவுள்களும், கோவில்களும் அவற்றிற்கு ஆதாரமான வேத சாஸ்திர புராணங்களும் அடியோடு ஒழிந்தாகவேண்டும் என்றும், இவைகளில் ஒரு சிறிது மீதி இருந்தாலும் மறுபடியும்அதுவளர்ந்துவிடும் என்றும்இதுவரையில் தீண்டாமையை ஒழிக்கப் பிரயத்தனப்பட்டவர்கள் யாரும் தீண்டாமைக்கு அஸ்திவாரமான காரியத்தை அறியாமலும், சிலர் அதைப்பற்றி அறிந்தும் கவலை கொள்ளாமலும், சிலர் வேண்டுமென்றே தெரிந்து மறைத்து ... தும் மக்களையும் ஏமாறச்செய்துவிட்டுப்போய் விட்டார்கள்என்றும், இப்பொழுதும் சில போலி தீண்டாமை விலக்கு பிரசாரக்காரர்கள் அதை வலியுறுத்தும்மதத்தையுடகோவிலையும் சாமிகளையும் அது சம்பந்தமான ஆதார புராணங்களையும் வைத்துக் கொண்டே தீண்டாமை ஒழியவேண்டும் என்றுஉங்களை ஏமாற்றுகின்றார்களென்றும், உதாரணமாக பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்ற பெயர்கொண்ட வர்ணாச்சிரமத்தை அடிப்படையாகக்கொண்ட இந்து மதம், வேதம், மனுதர்ம சாஸ்திரம் என்பவைகள் உள்ள வரையிலும் தீண்டாமை ஒழியாது என்றும்,

சூத்திரன் கடவுளை வணங்கியதற்காக பிராமணன் குழந்தை செத்துப்போனதாகவும், கடவுள் அவதாரமாகிய ராமன் என்பவன் அந்த சூத்திரனைக் கொன்ற பின் அந்த பிராமணக் குழந்தை உயிர் பெற்றெழுந்ததாகவும் சொல்லும் இராமாயணமும் இராமன் என்னும் கடவுளும் உள்ள வரையிலும் தீண்டாமை ஒழியாது என்றும்,

அது போலவே பறையன் என்னும் நந்தன்நெருப்பில் விழுந்த பிறகு தான் கடவுள் தரிசனை கிடைத்தது என்கின்ற பெரியபுராணமும் அதிலுள்ளகடவுள்களும்உள்ளவரையிலும் தீண்டாமை ஒழியாது என்றும்,

ஜீவகாருண்யமும் அன்பும் ஒழுக்கமுமே பிரதானம் என்று சொன்ன பௌத்தரையும் சமணர்களையும் நாஸ்திகர்கள்என்றுசொல்லி ஜீவ இம்சையும் இரக்கமற்ற தன்மையும் ஒழுக்கங் கெட்ட நிலையையும் கொண்டுள்ளவர்களை பெரியோர்கள் சமயாச்சாரிகள் ஆழ்வார்கள் என்று கொண்டாடும் புராணங்களும் சமயங்களும் உள்ளவரையிலும் தீண்டாமை ஒழிந்து ஒழுக்கமும் அன்பும் மக்களுக்குள் ஏற்படாதென்றும்,

உண்மையிலேயே கஷ்டப்படும் மக்களாகிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இப்போதிருக்கும் "நரகத்தை" விட இனி வேறு நரகம் இல்லை என்றும், ஆதலால் இந்த நரகத்திலிருந்து மீள வேண்டும் என்கின்ற ஆசை உங்களுக்கு இருக்குமானால் நீங்கள் கட்டாயம் உங்கள் மீட்சிக்கு விரோதமாய் இன்றும் உங்கள் முன் தோன்றும் மதத்தையும் அதன் ஆதாரங்களையும் அடியோடு வெறுத்துத் தள்ள வேண்டுமென்றும், சில மதப்புரட்டர்களும், அதனால் வயிறு வளர்ப்பவர்களும், அவர்களால் அமர்த்தப்பட்ட கூலிகளும் உங்களிடம் வந்து "மதத்தின் தத்துவம் அதுவல்ல" வென்றும் "புராணத்தின் கருத்து இதுவல்ல" வென்றும் 'அது இடைச்செருகல்' 'உட்கிடக்கை வேறு' 'அதற்கு அகச்சான்று இல்லை' 'இதற்கு புறச்சான்று இல்லை' 'என் வருணாசிரமம் வேறு' 'என் ராமன் வேறு' 'என் கிருஷ்ணன் வேறு' என்றும் பேசி உங்களை மயக்கி ஏமாற்ற வருவார்கள் என்றும் அதை நீங்கள் கண்டிப்பாய் நம்பக் கூடாதென்றும் சொல்லிவந்து உதாரணமாக சூத்திரன் கடவுளை ஸ்மரித்ததற்காக ராமன் அவனை கொன்றது என்கின்ற விஷயம் மத்தியில் பார்ப்பனர்களால் சேர்க்கப்பட்ட கதை என்று சொல்லி உங்களை சிலர் ஏமாற்

(இதன் தொடர்ச்சி 9ம் பக்கம் பார்க்க.)

## ஓர் சமாதானம்.

நமது "குடி அரசின்" சந்தாதாரர்கள் பெருக்கத்தால், ஈரோட்டிலிருந்து வெளியிடத்தகுந்த இயந்திர சௌகரியங்கள் போதாமலிருப்பதால் கொஞ்சகாலத்துக்கு நமது பத்திரிகை நிலயம் கூடியசீக்கிரம் சென்னைக்கு மாற்ற உத்தேசித்துள்ளோம். அதுவரை பத்திரிகைவெளியாக இரண்டொரு வாரத்துக்குஒன்றிரண்டு நாள் தாமதப்படலாம். ஆகையால் வாசகர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

## குடி அரசு

ஈரோடு சுக்கில-௵ சித்திரை-மீ 30-உ.

## மலையாளமும் மாளவியாவும்.

தென்னாட்டுப் பார்ப்பனர்கள் அரசியலிலாவது மத இயலிலாவது சமுதாய இயலிலாவது தங்களுடைய புரட்டுகள் எல்லாம் வெளியாய் விடுவதின் மூலம் செலவழிந்து விட்டால் வட நாட்டிலிருந்து யாராவது ஒருவரைக் கொண்டு வந்து பித்தலாட்டப்பிரசாரம் செய்வது வழக்கம். அதுமாத்திரமல்லாமல் தாங்களாக தனித்து வெளியில்புறப்பட்டுபிரசாரம் செய்ய முடியாத பட்சத்திலும் வெளி நாட்டிலிருந்து யாரையாவது பிடித்து வந்து அவர்கள் மதிப்பின் மறைவில்மேடை மேலேறிப் பேச இடம் சம்பாதித்துக் கொள்வதும் வழக்கம். இதுவும் சமீபகாலம் வரை பாமர மக்கள் முழு மோசமாயிருந்த காலம் வரையில் தான் செல்லாய்க்கொண்டு வந்தது. இப்போது அடியோடு இவர்கள் யோக்கியதை வெளியாய்விட்டதால் சிறிது கூட செல்லாணி ஆவதற்கில்லாமல் செல்லுமிடங்களி லெல்லாம் சாயம் வெளுத்துப் போய் உண்மை நிறம் வெளியாய்க்கொண்டு வருகின்றது. அதாவது சென்றவருஷத்திற்குமுன் திரு. காந்தியைக் கூட்டிக்கொண்டு வந்து அலைத்த் தங்களிஷ்டப்படி ஆட்டிவைதது ஊர் ஊராய்த் திரிந்ததில் இவர்கள் சாயம் வெளுத்ததல்லாமல் அவர் சாயமும் வெளுத்து "என் ராமன் வேறே என் வருணாச்சிரமம் வேறே" என்று சொல்லிக்கொண்டு தப்பித்துப் போகப்பட்ட பாடு வெகு பாடாய்ப் போய்விட்டதும், பிறகு திரு. பஜாஜ் அவர்களைத்தருவித்து அவருடன் திரிந்ததில் உள்ள யோக்கியதையும்போய் அவர் தலையில் கைவைத்துக்கொண்டு திரும்பியதும் திருவாளர்கள் சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி ராஜகோபாலாச்சாரியார் முதலியவர்கள் தாங்கள் தனித்து போக முடியாமல் திருவாளர்கள் வரதராஜுலு, கல்யாணசுந்தரம், முத்துரங்கம், ஓ. கந்தசாமி, பாவலர், ஜயவேலு, ஷாபிமுகமது, பஷீர்அகம்மது முதலிய நபர்களைக் கூட்டிக் கொண்டு வெளியில் போவதும், அங்கும் இப்போது எந்த ஊருக்கு போனாலும் எவ்வளவு பயந்து ஒடுங்கி அடக்கமாகப் பேசினாலும் இவர்களைப் பேசவொட்டாமல் திருப்பி அனுப்பிக்கப் படுவதும் பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களது கூலிப்பத்திரிகைகளும் எவ்வளவு தான் மறைத்தாலும் தாராளமாய் வெளிப்பட்டுக் கொண்டு வருகின்றது. இந்த இரண்டு மூன்று வாரமாய் திரு. சீனிவாசய்யங்கார் கம்பெனி செல்லுமிடங்கள் பலவற்றில் கூட்டம்போட முடியாமல் திரும்புவதும் கூட்டம் கலைக்கப்பட்டு வருவதும், அவர்கூடச் செல்பவர்களுக்கு நடக்கும் மரியாதைகளும் சேலம், திருச்சி, கோயமுத்தூர் முதலிய ஊர்களில் நடந்த சம்பவங்களே போதுமானது. இவ்வளவும் போதாமல் இந்த வருஷத்திற்கு திரு. பண்டிட் மாளவியா அவர்களைத் தருவித்து கடவுளுக்கும் கோயிலுக்கும், மதத்திற்கும், ராமாயணத்திற்கும் ஆபத்து வந்து விட்டதென்று சொல்லி பிரசாரம் செய்யச் செய்ததில் அவர் சென்ற விடங்களிலெல்லாம் சரமாரியாகக்கேள்விகள்கேட்டுத் திணறவைத்து கடைசியாகக் கூட்டம் கலைந்து வீட்டுக்குத் திரும்பும்படியாகிவிட்டது. பார்ப்பனர்களும் அவர்களது கூலிகளும் பண்டிதரைப்பிடித்து அவர் தலையில் வருணாசிரமத்தையும் கோவிலையும் மதத்தையும் இராமனையும் இராமாயணத்தையும் தூக்கிவைத்து எவ்வளவோ விளம்பரம் செய்தும் ஒரு காசுக்குக்கூட விற்கமுடியாமலே போனதோடு திரு. மாளவியாவுக்கு கொஞ்சநஞ்சம் இருந்த யோக்கியதையும் அடியோடு கவிழ்ந்து விட்டதென்றே சொல்லலாம்.

உதாரணமாக கோட்டயத்தில் நடந்த கோவில்பிரவேச மகாநாட்டில் தலைமைவகித்து பேசிய விபரமும் அங்கு நடந்த விபரமும் அடுத்தபக்கத்தில் தெரியலாம். ஆனால் அந்த விஷயங்களைப் பார்ப்பனப் பத்திரிகைகள் எவ்வளவோ மறைத்தும் சிறிதாவது வெளியாகவேண்டியதாய் விட்டது.

அதாவது 11-ந் தேதி இந்துபத்திரிகை வேண்டுமென்றே அயோக்கியத்தனமாய் அடியோடு மறைத்துவிட்டு 'உணர்ச்சியுள்ள வாதங்கள் நடந்தன' என்று மாத்திரம் எழுதி இருக்கிறது.

10-உ "சுயராஜ்யா"வில் "மாளவியாஜி பேசும்போது ஜாதி இருக்கவேண்டும் என்று சொன்னவுடன் கூட்டத்தார் பலமாக ஆக்ஷேபணை செய்தார்கள். சரமாரியான கேள்விகள் பலபக்கங்களிலிருந்து புறப்பட்டன" என்றும் "கூட்டத்தில்கூச்சலும் குழப்பமும் கலகமும் பரபரப்பும் உண்டாயிற்று" என்றும் எழுதி பலர் மேடைக்கு வந்து கண்டித்துப் பேசியதையும் எழுதி இருக்கின்றது.

12-உ "மித்திர"னில் திரு மாளவியா பேசின கான்பரன்சில் திரு மாளவியாவை கண்டித்து ஒரு தீர்மானம் செய்திருப்பதாகவும் பிரீ பிரசின்பேரால் போடப்பட்டிருக்கிறது. ஆனால் கேட்கப்பட்ட கேள்விகளும் பதில்களும் இன்னவையென்று ஒருபத்திரிகையாவது எழுதவில்லை என்றாலும் திரு. மாளவியா அவர் பிறந்ததுமுதல் இதுவரை இதுபோல் ஒரு கஷ்டத்தையும் அவமானத்தையும் அடைந்திருக்க மாட்டார் என்றே சொல்லலாம். திரு. மாளவியா ஜாதிகள் இருக்கவேண்டியது அவசியம் எனக்கு சாஸ்திரம் தெரியும்என்று சொன்னவுடன் ஒருவர் எழுந்து ஒரு கிருஸ்தவனையோ மகமதியனையோ இந்துவாக்கினால் அவனை எந்தஜாதியில் சேர்ப்பதுஎன்று கேட்டவுடன் மாளவியாஜி அதற்கு சாஸ்திரம் பார்த்துதான் சொல்லவேண்டும்என்று தலைகுனிந்து சொன்னதானது அவரைத் தருவித்தவர் கண்களில் ஜலம் ததும்பும்படி செய்தது.

மறுபடியும் ஒரு கேள்விக்கு, அதாவது உமது இந்து யூனிவர்சிட்டி காலேஜில் ஈழுவர்களை சேர்த்துக்கொள்ளுவீர்களா என்று கேட்டதற்கு மாளவியாஜீ "நீங்கள் புலையர்களைச் சேர்த்துக் கொள்ளுவீர்களா?" என்றுகேட்டதும் கூட்டமே ஆம் சேர்த்துக் கொள்வோம் என்று சொன்னதும், மாளவியாஜீயை மூர்ச்சையடையச் செய்துவிட்டது. எனவே மாளவியா நல்ல பாடம் கற்றுக் கொண்டார் என்று சொல்லத்தான் வேண்டும். இதற்கு நேர் எதிரியாகச் சுயமரியாதை கொள்கைகள் அங்கு தாண்டவமாடியதும், அவைகள் ஒரே அடியாய் ஒப்புக்கொள்ளப் பட்டதும், அப்போது ஏற்பட்ட உற்சாகமும் அங்கு சமீபத்தில் இருந்து பார்த்தவர்கள்தான் அறியக்கூடும்.

---

## வாழ்க! வாழ்க!! டாக்டர் சுப்பராயன் வாழ்க!!!

முதல் மந்திரி கனம் டாக்டர் சுப்பராயன் அவர்கள் நாம் எதிர் பார்த்ததுபோலவே தமது ஆதிக்கத்தில் உள்ள இலாக்காக்கள் மூலம் நமது பெண்மணிகளுக்கு மூன்றுவது பாரம் வரையில் இலவசமாய்க் கல்வி கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்து இருக்கிறார். என்ற செய்தியைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சி அடைந்து போற்றுவதுடன் மனமார வாழ்த்துகின்றோம். மற்றும் தீண்டாதவர்கள் என்பவர்களுக்கும், விதவைகள் என்பவர்களுக்கும் கல்வி விஷயத்தில் ஏதாவது உதவி செய்வதுடன் பெண்கள் உபாத்தியாயர்களாவதற்கும் தகுந்தபடி ஏராளமான போதனைமுறைப் பாடசாலைகளையும் ஏற்பாடு செய்யவேண்டுமாய் விழைகின்றோம்.

(7ம் பக்கத் தொடர்ச்சி.)

றுவார்கள். ஆனால் அவர்களை நீங்கள் ஒரே ஒரு கேள்வி கேளுங்கள். அதாவது, "சம்பூகனைக் கொன்ற இராமா என்னைக் காப்பாற்று" என்று ஆழ்வார்கள் பாடின பாட்டு நாலாயிர பிரபந்தத்தில் இருக்கின்றதே அதற்கு என்ன சொல்லுகின்றீர்கள்? என்றும், அந்த ஆழ்வாரையும், பிரபந்தத்தையும் என்ன செய்யப்போகிறீர்கள்? என்றும், அந்த ஆழ்வார் புரட்டாழ்வாரா? அல்லது அந்த பிரபந்தம் புரட்டா என்றும் தைரியமாய்க் கேளுங்கள். அதோடு புத்தர் கடவுள் உண்டு என்று சொன்னார் என்றும், புத்தர் கடவுளைப் பற்றி ஒன்றும் சொல்லவில்லை என்று சொல்லுபவர்கள் நாஸ்திகர்கள் என்றும் சில தற்குறிகள் உங்களிடம் பேசிவிட்டுப் பார்ப்பனர்களிடம் கூலி பெறுகிறார்கள். ஆனால் அப்படிப்பட்டவர்களை நீங்கள் ஒன்று கேளுங்கள். அதாவது புத்தர் நாஸ்திகர், கடவுள் இல்லை என்று சொன்ன பாதகர் என்று சொல்லி இருக்கும் ராமன் முதலிய கடவுள்களும், சமயாச்சாரிகளும், நாயன்மார்களும், ஆழ்வாராதிகளும் ஆராய்ச்சி அற்றவர்களா அல்லது பொய்யர்களா அல்லது அயோக்கியர்களா? அல்லது அவர்களின் அவ்வித இராமாயணம், பாரதம், தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருவிளையாடல் புராணம் முதலிய 'வணங்கத்தகுந்த' புஸ்தகங்கள் பொய்யா? அல்லது இடைச்செருகலா? அல்லது அகச்சான்று புறச்சான்றுகள் அற்றவையா? அல்லது நீங்களும் குழாங்களும் ........ள் என்று கேளுங்கள் என்றும், கடைசியாக உங்களை யார் நாஸ்திகர் என்றாலும் பயப்படாதீர்கள் என்றும், "ஆஸ்திகர்" களைப் போல் கூலிக்காக நாம் நாஸ்திகப் பிரசாரம் செய்யவில்லை என்றும், நாஸ்திகர் என்றால் வேத சாஸ்திர புராணங்களின் புரட்டுகளை வெளிப்படுத்துவதைத்தவிர வேறில்லை என்றும், ஆதலால் நானும் நீங்களும், மற்றும் சுயமரியாதையையும், சமத்துவத்தையும் விடுதலையையும் வேண்டும் ஒவ்வொருவரும் கண்டிப்பாய் நாஸ்திகர்களே ஆகவேண்டும் என்றும், அதில்லாமல் வேறுவழியில்லை என்றும், யாராவது வந்து உங்களிடம் நாஸ்திகம் என்றால் கடவுள் இல்லை என்று சொல்வதாகும் என்று சொல்லவந்தால் அதற்கும் நீங்கள் பயந்து ஏமாந்து போகாமல் தைரியமாக அவர்களை ஒன்று கேட்க வேண்டும் அதாவது கடவுள் என்றால் என்ன? எதைக்கடவுள் என்று நினைத்துக் கொண்டு பேசுகின்றாய் என்று முதலில் கேட்கவேண்டும். இந்தக் கேள்வி கேட்டால் முதலில் எவனும் விழிப்பான். ஒருவன் சக்தி என்பான், ஒருவன் ஜோதி என்பான், ஒருவன் அருள் என்பான், ஒருவன் அன்பு என்பான், ஒருவன் அறிவு என்பான், ஒருவன் உயிர் என்பான், ஒருவன் ஆத்மா என்பான், ஒருவன் சித்து என்பான் ஒருவன், சத்து என்பான், ஒருவன் சூன்னியமென்பான், ஒருவன் பதி என்பான், ஒருவன் அழகு என்பான், ஒருவன் இன்பம் என்பான், ஒருவன் சைதன்ய என்பான், ஒருவன் நாமரூபகுணம் இல்லாதது என்பான், ஒருவன் அது உன் மனதுக்கும் அறிவுக்கும் எட்டாதது என்பான், கடைசியாக சர்வசக்தியும் சர்வவியாபகமும் சர்வ தயாபரத்துவமும் அவனன்றி ஒரு அணுவும் அசையாத அதிகாரமும் பெற்ற ஒரு வஸ்து என்பான்.

இப்படியாக ஊமையன் கனக்கண்டு சொல்வது போல் அவனுக்கும் புரியாமல் நமக்கும் தெரிய மார்க்கமில்லாமல் உளறிக்கொட்டுவான். கடைசியாக இந்த பயித்தியகாரனுடன் இவ்வளவுநேரம் ஏன்பேசினோம்? கோ ரம்வீணாகப்போயிற்றே என்று தான் உங்களுக்குத் தோன்றும். ஆனாலும் சோர்வடைந்துவிடாமல் அப்பேர்ப்பட்ட கடவுளை பரப்ப உன்னை அனுப்பினது யார்? நீ நினைத்துக் கொண்டிருக்குக்கும் கடவுளா? அல்லது நீயாகவே வந்தாயா? என்று கேளுங்கள். அவன் கடவுள் அனுப்பத்தான் வந்தேன் என்றால் அந்தக் கடவுள் இது தன்னால் ஆகாத காரியம் என்று கருதி உனக்கு வக்காலத்துக் கொடுத்து எம்மிடம் அனுப்பினாரா? என்று கேளுங்கள். அல்லது "நானாகவே வந்தேன்" என்றால் அப்பொழுது உனக்கு கடவுள் மீது நம்பிக்கை இல்லையா? அவர் தன்னை எல்லோரும் அறியும்படி செய்துகொள்ளமாட்டாரா? அன்றியும் கடவுள் திருவுளம் இல்லாமல் ஒருவன் கடவுளை இல்லையென்று சொல்லிவிட முடியுமா? என்று கேட்பதோடு பைத்தியகாரா உனக்குக் கடவுளைப்பற்றி இப்போதுதான் அ. ஆ தெரியும்; எங்களுக்குக் கடவுளைப்பற்றி நாங்கள் என்று தீண்டாதவர்கள் என்று சொல்லப்பட்டோமோ அன்றுமுதலே தெரியும்; ஆகலால் வேறு எங்காவதுபோய் உன் வயிற்றுப்பிழைப்புக்கு இடம் பார்த்துக்கொள் என்று மரியாதையாய்ச் சொல்லி அனுப்பிவிடுங்கள் என்றும் சொன்னதோடு நாஸ்கம் என்கின்ற பழிப்புக்கு பயந்துகொண்டோ கலைகள் ஓவியம் என்கின்ற பித்தலாட்டங்களுக்கு பயந்துகொண்டோ தீண்டாமை கடவுள் செயல் என்பதாக முட்டாள்தனமாக கடவுளை நம்பிக்கொண்டோ நீங்கள் உங்கள் சுயமரியாதை முயற்சியில் அதாவது உங்கள்மீது கடவுள் பேராலும், மதத்தின் பேராலும், வேத சாஸ்திர புராணங்கள் பேராலும் சுமத்தப்பட்டுள்ள தீண்டாமை என்னும் இழிவிலிருந்து விடுதலைபெற ஒரு நிமிஷமும் தயங்காதீர்கள். கடவுள் அல்ல, மதம் அல்ல, வேதசாஸ்திர புராணமல்ல, சமயச்சாரியார், நாயன்மார்கள், ஆழ்வார்கள் அவதாரங்கள் அல்ல, மற்றும் உங்கள் உயிர்கள் அல்ல எதுவானாலும் சரி அவைகளை யெல்லாம் விட சுயமரியாதையே பிரதானம் என்று எண்ணினீர்களானால் கண்டிப்பாய் வெற்றிபெறுவீர்கள், அதில்லாதவரை இப்படியே இருப்பீர்கள் என்றும் வெகு ஆவேசமாய் சுமார் மூன்றரைமணி நேரம் வேதத்தைப்பற்றியும், அநேக புராணங்களைப்பற்றியும், இந்துமதம் என்பதைப்பற்றியும், அவைகள் பொய்யென்றும், கட்டுக்கதை என்றும் யாவருக்கும் உணர்ச்சி உண்டாகும்படி பேசிவிட்டு செங்கற்பட்டு மகாநாட்டுத்தீர்மானங்களை அப்படியே இங்கிலீஷிலும் தமிழிலும்படித்துக்காட்டி ஏகமனதாய் பெருத்த ஆரவாரத்துடன் சபையோரின் சம்மதம்பெற்று முடிவுரையாக சிலவார்த்தைகள்சொல்லி ஆசனத்திற்குப் போனார். பிறகு 'சகோதரன்' பத்திரிகையின் பத்திராதிபரும் கொச்சி சட்டசபை அங்கத்தினருமான திரு. அய்யப்பர் பி. ஏ. அவர்கள் தலைவருக்கு வந்தனம் கூறுகையில் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும் என்றும், மறுபடி இதைத் தவிர விடுதலை பெறுவதற்கு வேறுமார்க்கமில்லை என்றும் ஈழவசமுதாயத்தில் வெகுபேர் அதாவது படித்தவர்களும் வாலிபர்களும் இதே அபிப்பிராயத்தை வெகுகாலமாய்க் கொண்டவர்கள் என்றும், ஆனால்இன்றுதான் இக்கொள்கைகளை வெளிப்படையாகப் பேசி ஒப்புக்கொள்ள நேர்ந்தது என்றும், பிரிட்டிஷ் ஆட்சியில் உள்ளவர்களுக்குத் தீண்டாமை ஒழிவதற்கு முன் திருவாங்கூர் ராஜ்ஜியத்தில் ஒழிந்துவிடுமென்று உறுதி கூறுவதாகவும் சொல்லி திரு. ராமசாமியாருக்கு நன்றி தெரிவித்து மாலை சூட்ட மகாநாடு இனிது நிறைவேறியது.

## ஆலயப்பிரவேச மகாநாடு.

## மாளவியா ஜி சொற்பெருக்கு.

அடுத்த நாள் பகல் 3 மணிக்கு திருவாளர் பண்டிதர் மதன்மோகன மாளவியா அவர்கள் தலைமையில் ஆலயப் பிரவேச மகாநாடு நடந்தது. அன்றும் பதினாயிரம் மக்களுக்கு மேலாகவே கூடியிருந்தார்கள் எனினும் திரு மாளவியா சென்னையில் வருணாச்சிரமத்தை ஆதரித்துப் பேசிய பேச்சுக்களும் கோவில்களை இடிப்பதற்கு வருந்தியதாகப் பேசிய பேச்சுக்களும் இந்து மகாநாட்டில் ஆலயத்திற்குள் வருணாச்சிரமப்படி இடம் பிரிக்க வேண்டுமென்று பேசிய பேச்சுக்களும் பாலக்காட்டில் வருணாச்சிரமத்தில் நம்பிக்கை உள்ளவர்கள் தீண்டாதாரைத் தொட நேர்ந்து விட்டால் அசிங்கப்படாமலும், ஆக்ஷேபிக்காமலும் தொட்டுவிட்டு வீட்டிற்குப்போய் ஸ்நானம் செய்து கொள்ளுங்கள் என்றும், மற்றும் இராமாயணத்தைப் பற்றியும், பாரதத்தைப் பற்றியும் ஜாதியின் அவசியத்தைப் பற்றியும் பேசிய பேச்சுக்களைப்பற்றி மலையாளப் பத்திரிகைகளில் கண்டித்தெழுதப்பட்டிருந்தவைகளை வாசித்திருந்தும், முதல் நாள்களில் இரண்டு மகாநாட்டுத் தலைவர்கள் சொற்பொழிவிலிருந்தும், இந்த இரண்டு மூன்று நாளாகப் பந்தலுக்குவெளியில் போடப்பட்ட பல பொதுக் கூட்டங்களிலிருந்தும், மற்றும் துண்டு விளம்பரங்களிலிருந்தும், வேகமும் உற்சாகமும் கொண்டிருந்த பொது ஜனங்கள் திரு. மாளவியா அவர்கள் அக்கிராசனப் பிரசங்கம் தொடங்கி சில வார்த்தைகள் சொல்லிவிட்டு "ஜாதி வித்தியாசமுறை கெடுதியல்ல" என்கின்ற வாக்கியத்தை ஆரம்பித்தவுடன் கூட்டத்தில் ஒரே கூச்சலாய் "அதுதான் பெரிய கெடுதி இந்தியாவை அடிமை ஆக்கியதே அது தான்" என்று சொன்னார்கள். உடனே திரு. மாளவியாவுக்கு முகம் கருத்துவிட்டது. அதை அப்படியே விட்டுவிட்டு அடுத்தாற்போல் மதத்தைப்பற்றி "இந்துமதம் சிறந்தது, அது உலகத்திற்கு எவ்வளவோ

நன்மை செய்திருக்கின்றது" என்று சொன்னவுடன் "இந்துமதமே இந்தியா தேசத்தைப் பாழாக்கிற்று, தரித்திரமாக்கிற்று, கல்வி அறிவற்ற மக்களாக்கிற்று" என்று ஒரே சப்தமாய்ச் சொன்னார்கள். இதையும் அப்படியே விட்டு விட்டு, அதற்குப் பிறகு, புராணங்களின் மேன்மையைப் பேச ஆரம்பித்து இராமாயணத்தைப் பற்றி பேசக் கருதி இராமாயணம என்று வாய்திறந்தவுடன் இராமாயணம் பிராமண நன்மைக்கு ஏற்பட்டது, எங்களுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை நாங்கள் இங்கு இராமாயணக் காலக்ஷேபம் கேட்க வரவில்லை." என்று சத்தம் போட்டார்கள். பிறகு, "ராமன் எல்லோருக்கும் கடவுள்" என்று சொன்னதும் கூட்டத்திலுள்ளவர்கள் "ராமன் கடவுள் அல்ல, அவன் ஒரு பிராமண அடிமை, திராவிடர்களுக்கு ராமன் எதிரி ஆவான்" என்று சொன்னார்கள். பிறகு பண்டிதர் "இங்கு ஆரியர் திராவிடர் என்கின்ற உணர்ச்சி இருப்பதாகக் காண்கின்றது; அந்த உணர்ச்சி கூடாது; ராமன் விஷ்ணு அவதாரம், அவனுக்கு பிராமணர் சூத்திரர் வித்தியாசமில்லை" என்று சொன்னார். உடனே கூட்டத்தில் "சூத்திரன் என்கின்ற பதத்தை வாபீசு வாங்கவேண்டும், ராமனும் விஷ்ணுவும் எங்களுக்கு வேண்டாம்" என்று சொன்னார்கள். இதைக்கேட்டதும் பண்டிதர் ஒரு சுலோகம் சொல்லி இராமனுக்கு ஜே! என்று சொன்னார், உடனே கூட்டத்திலுள்ளவர்கள் முழுவதும் இராவணனுக்கு ஜே! என்று 5, 6 தடவை சத்தமாக உரத்துச் சொன்னார்கள். அதோடு இராவணன் எங்கள் குலத்தவன். அதாவது ஈழநாட்டரசன். அவனை ராமன் சூழ்ச்சிசெய்து ராவணனது தம்பியைவசமாக்கிக்கொண்டு கொடுமைசெய்ததோடு இராஜகுடும்பத்தினரை அரக்கரென்றும் மற்றவர்களை எல்லாம் குரங்குகள் என்றும் சொல்லப்பட்டிருக்கின்றது. இராமாயணம் கொளுத்தவேண்டிய புஸ்தகமாகும் என்று கூச்சல் போட்டதோடு ஒரு வாலிபர் முன் வந்து இங்லீஷில் பேசி We are not here to hear all this nonsense அதாவது இந்த ஆபாசங்களை கேட்க இங்கு நாங்கள் வரவில்லை என்று எதிரில் நின்று சொன்னார்.

உடனே மாளவியாஜி திக்குமுக்காடிக் கொண்டு உங்களுக்கு ராமன் எதிரியாய் இருக்கலாம். நீங்கள் ராமனை வெறுப்பதற்கு ராவணனை போற்றுவதற்கும் பாத்தியமுண்டு. ஆனால் நான் ராமனைக் கடவுளாக கருதுகிறேன். அதாவது ராமாயணத்தில் உள்ள ராமனை அல்ல; மற்றெந்த ராமனை என்றால் மரத்திலும் கல்லிலும் ஒவ்வொருவருடைய ஆத்மாவிலும் பஞ்சபூதத்திலும் உள்ள ராமனை நான் கடவுளாகக் கருதுகிறேன். என்றும் அந்தராமன் தான் [illegible] என்று சொன்னார். இதைச்சொன்னவுடன் கூட்டத்தில் இருந்தவர்கள் "இராமாயண இராமனைத் தவிரவேறு ராமன் உங்களுக்கு எங்கிருந்துவந்தான்? அதற்கு ஆதாரம் என்ன?" என்றுகேட்டதும் பண்டிதர் அதைவிடுத்து மற்ற மதக்காரர்களை நம்மதத்தில் சேர்க்கலாம் என்றார் உடனே திரு ராமவர்மா தம்பன் ஒரு கிருஸ்தவனை இந்துவாக்கினால் அவனை எந்த ஜாதியில் சேர்ப்பது என்றார். அதற்கு மாளவியாஜி சாஸ்திரம் பார்க்கவேண்டும் என்றார் எல்லோரும் சிரித்தார்கள் கல்வியின் பெருமையைப்பற்றிப்பேச ஆரம்பித்து மலையாளத்தின் பெருமையைப் புகழ்ந்து பேசினார். உடனே புரபசர் திரு. ராமவர்மா தம்பன் B. A., L. T., அவர்கள் எழுந்து மாளவியாஜி! உங்களிடம் எங்களுக்கு அதிகமதிப்பு இருக்கின்றது. ஜாதி வித்தியாசத்தால் நாங்கள் படும் கஷ்டத்திற்கு ஏதாவது வழி சொல்லுவீர்கள் என்று தங்களை அடைந்தோம், தாங்கள் அதற்கு ஒரு பதிலும் சொல்லாமல் இருக்கின்றீர்களே, ஜாதி வித்தியாசத்தில் உயர்வு தாழ்வு இல்லை என்று சொல்லுகின்ற நீங்கள் ஈழவர்களை உங்கள் பனாரஸ் இந்து யூனிவர்சிட்டியில் சேர்த்துக் கொள்ளுவீர்களா என்று சொன்னார். அதற்குப் பண்டிதர் "ஜாதி வித்தியாசம் என்பது மிகவும் அற்பமான விஷயம். அதைப்பற்றி அதிக கவலைப்படாதீர்கள்" என்று சொன்னார். உடனே கூட்டத்தில் அதுதான் எங்களுக்கு முக்கியமானது. அதனால்தான் நாங்கள் மிருகங்களைவிடக் கேவலமாய் மதிக்கப்படுகின்றோம், அதை ஒழிக்கத் தாங்கள் ஏதாவது வகை சொல்லுவீர்கள் என்று ஆசைப்பட்டு தங்களுக்காக 400 ரூ. வழிச்செலவு செய்திருக்கிறோம். இப்படி இருக்க தாங்கள் ஜாதி வேண்டும் வித்தியாசம் வேண்டும் என்றுசொல்வது தர்மமா? இதற்காகவா ரூபா 400 செலவு? என்று மிக வருத்தமாக ஒருவர் சொன்னார். இதைக் கேட்டதும் பண்டிதருக்கு கோபம் வந்துவிட்டது. உடனே நிமிர்ந்து உட்கார்ந்து அப்படியானால் நீங்கள் உங்களைவிட தாழ்ந்த புலையர்களையும், பறையர்களையும் உங்கள் கோவிலுக்குள் விடுவீர்களா? என்று கேட்டார். இவ்வளவுதான் தாமதம் உடனே கூட்டத்தில் உள்ளவர்கள் எல்லோரும் எழுந்து ஒரே கூச்சலாய் வெட்கம் வெட்கம் என்று கத்திக் கொண்டு பண்டிதருக்குப் பக்கத்தில் போய் பண்டிட்ஜீ எழுந்து வாருங்கள், உங்களையும் புலையர்களையும் எங்கள் கோவிலுக்குக் கூட்டிக் கொண்டு போகின்றோம். அவர்கள் பக்கத்திலிருந்து சாப்பிடுகின்றோம் என்று கூப்பிட்டார்கள்.

கூட்டம் கலவரத்தில் வந்து விட்டதால் மேலால் ஒன்றும் பேசமுடியாமல் போய் விட்டதால் உடனே கூட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மேலால் யாதொரு காரியமும் நடவாமல், தீர்மானங்களும் செய்யாமல் பண்டிருக்கு திரு டி, கே. மாதவன் வந்தனம் சொல்லி கூட்டம் கலைக்கப்பட்டு பண்டிதர் அழைத்துச் செல்லப்பட்டார். கூடவே சிலர் "மாளவியா மலையாளத்திற்கு வேண்டாம்" 'பண்டிதர் நாணயம் (காசு) மலையாளத்தில் செல்லாக்காசாய் விட்டது,' '10 வருஷத்திற்கு முன்பு பேச வேண்டிய பேச்சு இப்போது பேசினார்.' 'இந்து மதத்தில் பி. ஏ. படித்த எங்களுக்கு பண்டிதர் இப்போது அரிவரி சொல்லிக் கொடுக்கின்றார்.'

'மாளவியாக்களாலும், காந்திகளாலும் ஜாதி ஒழியப் போவதில்லை. சுயமரியாதை இயக்கத்தைத் தவிர எங்களுக்கு வேறு கதியில்லை. ஒரு சமயம் இது கடவுள் முகத்திலும் தோளிலும் காலிலும் பிறந்தவர்களுக்கும் 'ஆஸ்திகர்'களுக்கும் தேவையில்லாமல் இருக்கலாம். ஆனால் எங்களுக்கு அதைத்தவிர வேறு கதியில்லை' என்று பண்டிதர் காதில் விழும்படி கூடவே பேசிக் கொண்டு போனார்கள்.

திரு. பண்டிதர் இதையெல்லாம் கேட்டுக் கொண்டு முகத்தை வெகு கஷ்டத்துடன் சிரிப்பது போல் காட்டிக் கொண்டு தலையை ஆட்டிக்கொண்டே போனார். 400 ரூ போச்சுது! 400 ரூபா வீணாய்ப் போச்சுது என்கின்ற பேச்சே பல்லவியாயிருந்தது.

பிறகு அன்று இரவு மகாநாட்டில் திரு. மாளவியா அவர்களையும் அவருடைய பேச்சுக்களையும் கண்டித்து ஒரு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. அதாவது "மாளவியாஜீயை மரியாதை செய்வதோடு மற்றபடி அவர் தமது உபந்நியாசத்தில் கோவில் உரிமை எல்லோருக்கும் உண்டு என்று சொன்னது தவிர, மற்ற எல்லா பாகங்களையும் சிறப்பாக ஜாதி வித்தியாசத்தை நிலை நிறுத்த வக்காலத்து பேசுவதையும் இக்கூட்டம் பலமாக கண்டிக்கின்றது." என்பதாகும். பிறகு S N D P யோகத்திற்கு நிர்வாகிகள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஒரு நிருபர்.

புதிய

## வட்டிக் கணக்குப் புத்தகம்

இரண்டு வருடகாலம் இடைவிடா உழைப்பால், ராயவரம் காந்தி பாடசாலை தர்ம நிதியை உத்தேசித்து என்னால் கணித்து வெளியிடப்பெற்ற புதிய வட்டிக கணக்குப் புத்தகங்கள் வாங்குபவர்கள் பலவித வட்டிக் கணக்குகளும் வெகு சுலபமாகப் பார்த்துக்கொள்ளலாம். இம்மாதிரி நூதன முறையில் இது வரை வெளியானதே கிடையாதென்பதை நேரில் பார்ப்பவர்கள் நன்கறிவார்கள். மேற்படி புத்தகங்கள் வாங்குபவர்கள் காந்தி பாடசாலை தர்ம நிதிக்கு உதவிய ஓர் நற்பலனையும் அடைகிறார்கள். இதன் விலை ரூ. 5—0—0.

ஐந்து புத்தகங்கள் ஏக காலத்தில் வாங்குபவர்களுக்கு தபால் சார்ஜ் இல்லை.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

சு. கதி. கதிரேசன் செட்டியார்,

புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்,

சு. கதி. கதிரேசன் செட்டியார், மானேஜர் காந்தி பாடசாலை, ராயவரம்,

சு. கதி. கதிரேசன் செட்டியார், மூவார். [புதுக்கோட்டை ஸ்டேட்.

# "இந்திய மாதா"

## முடிவுரை.

(திரு. அய்யாமுத்து எழுதுகிறார்.)

### குற்றங் கூறுபவன் நமது நண்பனே.

காதரைன் மேயோவெனும் அமெரிக்க மாதால் எழுதிப் பிரசுரிக்கப்பட்ட "இந்திய மாதா" வெனும் புத்தகத்தில் இந்தியா அவதூறு செய்யப்பட்டிருப்பதாய் என் தேசத்தார் பலர் வெம்பி வீழ்ந்தனர். அவ்விதம் வெம்பி வீழ்ந்தவர் ஒருவராயினும் இந்திய மாதாவில் கண்ட விடயங்கள் முழுப்பொய்யெனச் சாதிக்கவில்லை. எல்லோரும் மிகைபடக்கூறியதென்றே கூறினர். நாம் நாள்தோறும் சாப்பிடும் அரிசி, பருப்பு, காய்கறி இவைகளெல்லாம் நாள் தோறும் நம் கண்ணிற்குச் சிறிதாகவே காணப்பட்ட போதிலும், ஒரு வருடகாலத்தில் நமது வயிற்றினுட்புகுந்து சென்ற ஜல திட பதார்த்தங்களின் அளவையும், நிறையையும் யாராகிலுமொருவர் குறிப்பிட்டு வைத்திருந்து நமக்குக் காட்டினால், அந்த விவரங்களைப் பார்த்து நாம் திகைத்துப் போவோமென்பதில் ஐயமில்லை. அதுபோலவே ஏதோ நாம் கண்டுங்காணாமல் நம்முள் நாடோறும் நடைபெற்று வரும் குறைபாடுகளையும் மூடப்பழக்க வழக்கங்களையும் மேயோ ஒன்றாகத் திரட்டிப் புத்தக ரூபமாக வெளியிட்டதால் அது நம் கண்ணிற்கு மிகைபடத் தெரிவது வியப்பல்ல. உண்மையை ஒப்புக் கொண்டு சீர்திருத்தம் செய்யும் மனமுடையோர் மேயோ கூற வேண்டியதைக் குறைத்தே கூறினர் என்பர்.

மிஸ் மேயோ சர்க்காரின் கங்காணியாகவே வந்து, இந்தியருடைய நடை, உடை, பாவனை எல்லாவற்றிலும்குற்றங்கண்டு கூறி, இவ்வளவு கேவலமாகவிருக்கும் இந்தியர் சுயாஜ்ஜியத்திற்கு எப்படி லாயககானவர்கள்? என்பதையே அடிப்படையாகக் கொண்டு விஷயங்களை முடித்திருப்பதாகவும், இந்தியரிடம் சில குறைகள் இருக்கின்றன என்பதையும், அவற்றைப் போக்க வேண்டியது அவசியம் என்பதையும் தாம் ஒப்புக் கொள்ளுவதாகவும் ஆனால் அவைகளுக்கு ராஜீயப்பூச்சுப் பூசி, அதனால் இந்தியர் சுயராஜ்யத்திற்குலாயக்கில்லையென்றுஸ்தாபிக்க முயல்வது போக்கிரித்தனமாகும். சமூக ஊழல்கள் எல்லா நாட்டிலும், எல்லா ஜனங்களிடமும் இருக்கின்றன என்பதாகவும என தன்பைக்கவர்ந்த திரு பி. வரதாராஜுலுஎழுதியிருக்கிறார்.

இதில் மேயோ, வெள்ளைக்கார ஆட்சியை உலகத்தில் வலுப்படுத்தும் கொள்கையுடையார் என்பதையும், இந்தியரை உலகத்தார் முன்னிலையில் அவமதித்துக் கூறி இந்தியாவைப்பற்றி நிற்கும் ஆங்கில அரசாங்கத்தின் இருப்புக் கைகளை பலப்படுத்தவே இப்புத்தகம எழுதியுள்ளார் என்பதையும் யான் கூசாமல் ஒப்புக்கொள்ளுகிறேன். அது பற்றி மேயோவின் நோக்கத்தையும், குரோதபுத்தியையும், மண்ணாசையையும் யான் மிகவும் அழுத்தமாகக் கண்டிக்கிறேன். ஆனால் அவர் (மிஸ் மேயோ) எந்நோக்கோடு கூறியிருப்பினும், கூறிய விஷயங்கள் உண்மையேவென முந்திய கட்டுரைகளில் விளக்கியிருக்கிறேன். என்னை ஒரு சபையின் முன்னிலையில் ஒருவர் அவமதிக்கும் பொருட்டு "நீ முழுக்குடியன்" என்று கூறி அவமதித்தால், அவருடைய நோக்கத்தையும் மற்றதையும் கவனிக்காமல் என்னிடமிருக்கும் குடிக்கும் தன்மையை அது முழுக்குடியாயினும் அரைக்குடியாயினும், அளவில் சண்டை போட்டு காலத்தை வீணுக்காமல் உடனே அகற்றிக் கொள்ள வேண்டுவது எனது முதற்கடமையாகும் என்பதை நண்பர் ஒப்புக் கொள்வர். எனது குடிக்கும் வழக்கத்தை நீக்கிக் கொண்டு, பிறர் யாரும் என்னை அவமதியாது இருக்கும்படியான சந்தர்ப்பத்தை அந்த அவமதித்த நண்பன் எனக்கு அளித்தது பற்றி யான் அவனை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளேன்.

### பிறநாட்டிற்கும் நமதுநாட்டிற்கும் உள்ள வேற்றுமை

இரண்டாவதாக திரு நாயுடுகாரு கூறியது "சமூகஊழல்கள் எல்லா நாட்டிலும், எல்லா ஜனங்களிடமும் இருக்கின்றன." என்பது. ஊழல்கள் எல்லா நாட்டிலும் எல்லாஜனங்களிடமுமிருந்த போதிலும் உலகத்தில் பல்வேறு நாட்டினரும் சுதந்தரத்தோடு சுயவாட்சிபுரிந்து வாழ்வதேன்? இந்தியர் வெனும் இந்நாடு மட்டும் பல நூற்றாண்டுகளாக அந்நியர் ஆதிக்கத்தின் கீழ் அடிமைப்பட்டுக்கிடப்பதேன்? இதற்குற்ற சமாதானம் நமது நண்பர் கூறுவாராக. நம்முடைய நாட்டிலிருக்கும் ஊழல்களுக்கும், பிறநாட்டினில் காணப்படும் ஊழல்களுக்கும் அடிப்படையான வேற்றுமையுண்டு. நாம் தொட்டது தொண்ணூறுக்கும் மதம் மதம் என்று கூக்குரலிடுகிறோம். நாம் உண்பதிலிருந்து மலம் கழிக்கும் வரையிலும், விடியற்கால முதற்கொண்டு உறங்கும் வரையிலும், பிறந்தது முதற்கொண்டு சாகும் வரையிலும், செத்த பின்னிட்டும், மூச்சு வாங்குதல், விடுதல், எல்லாவற்றிற்கும் மதப்போர்வை போர்த்திருக்கிறோம். நம்முடைய மத உணர்ச்சி நம்முடைய மூடத்தனங்கட்கு அரண்செய்யாநிற்கிறது. மேல் நாடுகளில் அங்ஙனமல்ல. அவர்களுடைய அறியாமை நல்ல படிப்பினால் அகன்றுவிடும் தன்மை பொருந்தியது. அவர்களிடம் எவ்வளவு ஊழல் பொருந்தியிருப்பினும் நாம ஒரு தேயத்தினர், ஒரு சாதியினர், நம்முடைய வாழ்விலும் தாழ்வும் நமக்கு சம பங்குண்டு என்ற எண்ணத்தோடு கூடித் தொழில் புரிந்து வாழ்கின்றனர். அவர்களுடைய வேற்றுமைகளெல்லாம் தொழில் குறித்தும், பணம் குறித்தும் நிற்பன. தொழில் மாற்றத்தாலும் செல்வமாற்றதாலும் வேற்றுமைகளும் நிலையில்லாது மாறுவன. ஒரு காலத்தில் எவராலும் சீந்தப்படாமல் தெருக்களில் பத்திரிகை விற்றுக் கொண்டிருந்த பையன் மற்றொரு காலத்தில் பிரதம மந்திரி ஸ்தானம் வகித்து ராஜராஜக்களோடு கலந்து விருந்துண்ணும் பெருமையை நாம் காதால் கேட்டோம். ஆனால் இந்நாட்டிலோவெனில் கனம் டாக்டர் சுப்பராயன் முதன் மந்திரியாயினும் சரி, வைசிராய் ஆயினும் சரி, ரயில்வே போர்ட்டர் ஆயினும் சரி, அவர் நமது வர்ணாசிரமிகள் கண்ணில் "சூத்திர"னாகவே (இழிவான மனிதனாகவே) காணப்படுவார். நம்மை அடிமைகளாகவும், மேல் நாட்டாரை அரசர்களாகவும் செய்து வைத்துள்ளது இந்த அடிப்படையான வேற்றுமை யொன்று தான் என்பதை எனது நண்பர் இனியாவது கண்டு தெளியட்டும்.

### நாம் அடிமைப்பட்டுக் கிடப்பதேன்?

நமது சொந்த நாட்டிலேயே அந்நியர்களாகவும், எதிரிகளாகவும், நமக்குள் அன்பின்றி, ஒற்றுமையின்றி, சகோதர பாவனையின்றி வாழச் செய்யும் மதச்சம்பிரதாயங்களும், சாதிக்கட்டுகளும், மூடப்பழக்கவழக்கங்களும் இருக்கும் வரையில் நாம பிறநாட்டாரைப் போன்று தலை தூக்கப் போவதில்லை என்பது திண்ணம்.

'சுயராஜ்யம்' நமது பிறப்புரிமை என்பதையாவரும் மறுக்கவில்லை. ஆனால் சுயராஜ்யத்தைப்பற்றி நாம் சிந்திக்கவும் யோக்கியதை யற்றவர்களென்பதை சரித்திரம் நிரூபித்து விட்டது. பாழான ஆரியர்கள் (பார்ப்பனர்கள்-ஹிந்துக்கள்) என்றையதினம் இந்தியாவில் அடிவைத்தார்களோ அன்றைய தினமே இந்நாட்டை சனி பிடித்தது. அவர் இந்நாட்டில் பரப்பி விட்ட 'மனுதர்மங்களால்" நமது சமூகம் நாலு வர்ணங்களாகவும், பல்வேறு சாதிகளாகவும் பிரிந்து, ஒருவனை மற்றொருவன் வேறென மதிக்க வைத்து ஒருவனைக்கண்டால் மற்றவன் துவேஷிக்கும்படியாக ஒரு சாதிக்கொரு நீதி வகுத்து, ஒருவன் நடக்கும் பாதையில் மற்றவன் நடவாமல் படிக்கும், ஒருவன் குளிக்கும் ஓடையில் மற்றவன் குளிக்காமல் படிக்கும், ஒருவன் படிக்கும் பள்ளியில் மற்றவன் படியாமல்படிக்கும், ஒருவன் செய்யும் தொழிலை மற்றவன் செய்யாமற் படிக்கும், ஒருவன் வணங்கும் கோவிலில் மற்றவன் வணங்காமல் படிக்கும், ஒருவன் படிக்கும் வேதத்தை மற்றவன் பார்க்காமற்படிக்கும் ஏற்பட்டுவிட்டதால் நாம் சிதறுண்டு அடிமைப்பட்டுக்கிடக்கிறோம்.

ஹிந்துக்களென்னும் ஆரியப்பார்ப்பனருடைய மதக் கோட்பாடுகள் நம்மைப் பலவாறாகப்பிரித்து, நம்மில் ஒற்றுமை குன்றச் செய்துவிட்டதால் நம்மைப் பல நூற்றாண்டுகளாகப் பல தேயத்தினர் சூறையாடிச் சென்றனர். ஆப்கானியர் நாட்டைக்கொள்ளையடித்தனர், மொகலாயர் நாட்டில் அமுல் நடத்தினர். பாரசீகர் நாட்டில் தலைமை கொண்டனர், பிரான்சு தேசத்தார் வந்து போர்செய்து தோற்கடித்தனர், உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து பல்வேறு நாட்டினர் வந்து நம்மை நாசப்படுத்தினர். இப்போது ஆங்கிலேய அரசாங்கம நம்முடைய செல்வங்களை யெல்லாம் நாள்தோறும் சுரண்டிச் சுரண்டி நம்மைப் பாப்பர்களாக்கிவிட்டது. நம்முடைய நாட்டை நாம் ஆளவேண்டுவது நமது பிறப்புரிமையே எனினும் நமது 'கர்மபலன' நம்மை வேறாக்கிவிட்டது. இனிமையில் சோம்பலுற்றவன் முதுமையில்

வறுமையால் கஷ்டப்படுவது போலவும், வரவுக்கு மிஞ்சிய செலவு செய்தவன் இறுதியில் கடனாளியாவது போலவும், அளவுக்கு மீறிப் போகம் செய்தவன் கடைசியில் ஆண்மையிழப்பது போலவும் பருவத்தில் பயிர் செய்யாதவன் அறுவடை காலத்தில் ஓலமிடுவது போலவும், நாம் செய்த 'கர்மங்களின்' பலனை நாமே அனுபவித்துக் கொண்டுவருகிறோம்;

அந்நியருக்கு அடிமைப்பட்டுக்கிடப்பதே இந்தியாவின் "தலைவிதி" யாகும். அதிலிருந்து மீண்டு கொள்ள ஆஸ்திகச் சங்கங்களாலும், சைவப்பெரியார் தனிக்கூட்டங்களாலும், வர்ணாசிரமிகள் மகாநாடுகளாலும், காங்கிரஸ் ராஜீயத்தீர்மானங்களாலும், சட்டசபைப் பிரவேசத்தாலும் சட்டசபையை பகிஷ்கரித்தலாலும், உத்தியோகம் ஏற்றுக்கொள்ளுதலாலும், உத்தியோகம் ஏற்றுக்கொள்ளாமலிருப்பதாலும், ராமாயணப்பிரசங்கங்களாலும், சத்காலட்சேபங்களாலும், ஆலய வழிபாட்டினாலும், தாசிகள் நாட்டியத்தாலும், பார்ப்பனர்கள் ஜபங்களாலும், வேள்வியாலும், யாகத்தாலும், தவத்தாலும், சிந்தனையாலும், மற்ற மந்திர தந்திரங்களாலும் முடியவே முடியாது. உங்கள் 'தலைவிதி' உங்களை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கையில் நீங்கள் சுயராஜ்யம் எங்கள் பிறப்புரிமையென்றும், சமூக ஊழல்களுக்கு ராஜீயப் பூச்சு பூசுவது போக்கிரித்தனம் என்றும் சுயராஜ்யம் வந்தபின் எல்லாம் சரிப்படுத்திக்கொள்வோம் என்றும் "பைத்தியம் தீர்ந்தபின் கல்யாணம் செய்வதா, கல்யாணம் செய்தபின் பைத்தியம் தீருவதா" என்றும் நீங்கள் பிதற்றித்திரிவதால் 'சுயராஜ்யம்' வந்துவிடாது. சைமன் கமிஷனாலும் உங்கள் 'தலைவிதி' தீராது. சைமன் கமிஷனை பகிஷ்கரிப்பதாலும் உங்கள் 'தலைவிதி' போகாது. சட்டசபை வெடிகுண்டுகள் உங்கள் கர்ம பலனை வேரறுக்காது.

நீங்கள் வடகலை நாமம் போட்டாலும், தென்கலை நாமம் போட்டாலும், அதை நீங்கள் பட்டை பட்டையாய்ப் போட்டாலும், சன்னமாய்ப் போட்டாலும், நீங்கள் துளசிமணி தரித்தாலும், நாலாயிரப் பிரபந்தங்கள் படித்தாலும், உங்கள் 'கர்மபலன்' ஓடாது. நீங்கள் கண்ணு மூக்குத் தெரியாமல் விபூதிபூசிக்கொண்டாலும், கழுத்தொடிய தாவடங்கள் பூண்டாலும், சரியை, கிரியை, யோகங்களைப் பயின்றாலும், பன்னிரு திருமுறைகளைப் படித்தாலும் பதினாலு மெய்கண்ட சாஸ்திரங்களைக் கேட்டாலும், வேத இதிகாசங்களில் நம்பிக்கை பூண்டாலும், அகச்சான்று புறச்சான்று தேடிப் பிடித்தாலும், கலைகளையும், ஓவியங்களையும் நீங்கள் வளர்த்தாலும் நீங்கள் உலகத்தைக் காத்து ரட்சிக்கும் அவதாரங்களுக்காக தவங்கிடந்தாலும், உங்கள் விஷ்ணுவும், சிவனும் பூமியில் பிரசன்னமானாலும், கிழக்கே உதிக்கும் கதிரவன் மேற்கே உதித்தாலும் உங்கள் "கர்மபலன்" உங்களைவிட்டகலாதென்பது முக்காலும் திண்ணம்.

### விடுதலைக்கு வழி என்ன?

"கர்ம" காரதாககள் நீங்கள். நீங்கள் செய்த கர்மங்களின் பலாபலத்தை நீங்கள் அநுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் விரும்பினால் இக்கர்மபலனை உடைத்தெறியும்வல்லமை உங்களிடமே காணப்பெறுவீர்கள். ஒரு வீட்டைக் கட்ட உங்களுக்குத் திறன் இருக்குமாகில், அவ்வீட்டால் உங்களுக்கு இம்சை உண்டாகும் போது அதை இடித்துத்தள்ளும் ஆற்றலும் உங்களிடமே தான் இருக்கிறது. வீட்டை இடித்தெறிய மனங்கொள்ளாமல் ஐயோ, வீட்டால் துன்பம் ஏற்பட்டு விட்டதே, வீட்டைக்கட்டிய "கர்மபலனை" அநுபவித்தே தீரவேண்டும் என்று நீங்கள் எண்ணி வாளா கிடந்தால் அவ்வீடு இருக்கும் வரையிலும், அவ்வீட்டைக் கட்டிய "கர்மபலன்" உங்களைவிட்டகலாது. அத்துன்பத்தைப் போக்குமாறு நீங்கள் உங்கள் சிவனையும், விஷ்ணுவையும் வேண்டினாலும் தீராது. உங்கள் துன்பம் நீங்கவேண்டுமானால், உங்களுக்கு துன்பத்தை விளைவிக்கும் வீட்டை—உங்களுடைய வலிமையால் நீங்களே கட்டிய வீட்டை' நீங்களே தகர்த்தெறியவேண்டும். ஐயோ! கலைகள் போகின்றனவே ஐயோ! சித்திரம் போகிறதே என்று தயங்குவீர்களாகில், உங்கள் "கர்மபலன்" உங்களை விட்டகலாது.

இன்றைய தினம் நீங்கள் அநுபவித்து வரும் 'கர்மபலன்' என்னவென்று மேலே சொல்லிவிட்டேன். அதுதான் நீங்கள் பார்ப்பனீயத்துக்கு இடங்கொடுத்து, தாழ்மைப்பட்டு, அவதிப்பட்டு, அடிமைப்பட்டு மூட நம்பிக்கைகளாலும், மதவெறியாலும், வீண் சடங்குகளாலும் நாசமுற்று சேதமுற்று அதனால் வேற்றுமைப்பட்டு அந்நிய ஆதிக்கத்தால் சேதப்பட்டுக்கிடப்பதாகும். இப் பார்ப்பனீயத்தை என்றைய தினம் ஒழிக்கின்றீர்களோ அன்றைய தினமே உங்கள் "கர்மபலன்" உங்களை விட்டகன்று, அன்றைய தினமே நீங்கள் மனிதத்தன்மைவாய்ந்து உங்கள் சகோதர சகோதரிகளோடு சரி நிகர் சமானமாக வாழ்வீர்கள். அன்றைய தினமே ஆங்கிலவாட்சி தானாகவே இந்தியாவினின்று விலகிக்கொள்ளும்.

### மேயோ சொன்னதும் அதுவே.

இதைத்தான் மேயோவும் கூறியுள்ளார் நீங்கள் அதை அறியாமல் வெம்பி வீழ்ந்தீர்கள். பார்ப்பனீயத்தில் நீங்கள் சிக்குண்டு கிடப்பதால் உங்கள் பொருள்களையும் நேரத்தையும் கோவில்களிலும் அர்ச்சகர்களிலும் தாசி வேசிகளிலும் வீணாக்குகிறீர்கள். ஆண்டவன் பேரால் மிருகங்களைப் பலிகொடுக்கிறீர்கள். பிள்ளை வரத்துக்காக கற்பிழக்கிறீர்கள். தீர்த்தம் தீர்த்தமென்று மலத்தைக் குடிக்கிறீர்கள். குப்பைக்காரியென்று குறை கூறினீர்கள். வெறும் பேச்சுப்பேசி வெட்க முறுகிறீர்கள். சிற்றின்பத்தாலே சீர்கெட்டுப் போனீர்கள், விபசாரம் வேணும் வேணுமென்கிறீர்கள், விபசாரத்தை தேவர்களும் கைக்கொண்டுள்ளார்கள் என்று புராணம் படிக்கின்றீர்கள், பெண்களை அடிமை கொண்டீர்கள். அவர்களுக்கு கல்வி மறுத்தீர்கள், சிறைப்படுத்தினீர்கள், விதவைத்தன்மையை ஏற்படுத்திக் கற்பழித்தீர்கள், கருவழித்தீர்கள், சிசுக்கொலை புரிந்தீர்கள், கர்ப்பிணிகளைக் கவனியாமல் வயல் வரப்புகளில் தள்ளினீர்கள், பூணூல் பார்ப்பனரின் பாதம் வருடினீர்கள், உங்கள் பெண்டு பிள்ளைகளையும், பொருள்களையும், சகல சுகபோகங்களையும் பார்ப்பனனுக்கு மனுச்சட்டப்படி சொந்தமாக்கினீர்கள், பஞ்சமர்களை வஞ்சகமாய் நடத்தினீர்கள், அவர்களுக்குக் கல்வி மறுத்தீர்கள், நல்ல உணவு மறுத்தீர்கள், நல்ல உடை மறுத்தீர்கள், நல்ல குடிசை மறுத்தீர்கள், இன்னும் எவ்வளவோ சொல்லுக்கடங்காத ஊழல்களையும், ஆபாசங்களையும், மூடத்தனங்களையும், நீங்கள் ஆபரணமாகப் பூண்டுள்ளீர்கள். இவைகளினின்று நீங்கள் என்று விலகுகிறீர்களோ அன்றுதான் உங்கள் "கர்மபலன்" உங்களை விட்டகலும், அன்றுதான் நீங்கள் சுயராஜ்ய வீரர்களாவீர்கள். அத்தகைய வீரத்தன்மையை உங்களுக்குக் கொடுக்கவே சுயமரியாதை இயக்கம் தோன்றியுள்ளது. அதன் கொள்கைகளைக் கடைப்பிடித்து, உங்கள் சுய அறிவு கொண்டு, சகலத்தையும் ஆராய்ந்து, கொள்ளவேண்டியவைகளைக் கொண்டு தள்ளவேண்டியவைகளைத் தள்ளி நீங்கள் ஒழுக்கம், தைரியம், ஆண்மை, வாய்மை, நேர்மை ஆகிய சகல நற்குண சீலர்களாகி அன்புத்தாய்ப்பி, ஒற்றுமையெனும் ஆபரணம் அணிந்து, பறையனும் பார்ப்பனனும் தத்தம் சாதிப் பெயர்களை மறந்து, கைலாகு கொடுத்து ஒன்றுபட்டு, ஒரு முகமாய், ஒரு மனதாய், ஒரு பிடியாய் நிற்பீர்களானால் எம்மேயோவும் உங்களைக் குறைகூறி வசை பாடமாட்டார். தன்னாட்சியல்லாத பிறவாட்சிகள் இந்தியாவில் தலை காட்டா.

### நமது வந்தனம்.

நம்மை இடித்துக்கூறி நம்முடைய கண்களை விழிக்கச்செய்து, நம்முடைய குறைகளை அகற்றி விழ்த்த, நம்மை மனிதர்களாகவும், சுதந்தர வீரர்களாகவும் எழுந்து நின்று போராடும் உணர்ச்சியை நம்முள் உண்டுபண்ணிய மிஸ். காதரைன்மேயோவுக்கு நமது வந்தனத்தைச் செலுத்துவோமாக.

---

## ஸ்ரீ வில்லிப்புத்தூர் சுயமரியாதைச் சங்கம்.

4—5—29 ந்தேதியில் ராமநாதபுரம் ஜில்லாபோர்டு பிரஸிடெண்டு உயர்திரு. சௌந்திரபாண்டியன் எம். எல். சி. அவர்கள் இங்கு விஜயஞ்செய்திருந்தபோது இவ்வூர் சுயமரியாதை சங்கத்தார் வாத்திய கோஷங்களுடன் எதிர்கொண்டழைத்தனர். கூட்டத்தில் முனிசிபல் சேர்மன் முதல்பல பிரமுகர்களும் உத்தியோகஸ்தர்களும் கலந்துகொண்டனர். சுயமரியாதைச்சங்க காரியதரிசி திரு. ஞா. பி. ஞானதேசிகரால் அவருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. உபசாரப்பத்திரத்திற்குபதில் கூறுமுகத்தான் திரு. சௌந்திரபாண்டியன் அவர்கள் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை வெகுதெளிவாக விளக்கிப் பேசினார்கள். வந்தனோபசாரத்திற்குப் பின்னர் சௌந்திர பாண்டியனுக்கு ஜே! என்ற முழக்கத்துடன் கூட்டம் முடிவுற்றது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

---

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

இராமனுக்குத் தனக்கிருந்த ஆண்மையில் காரணமாக முடிசூட்ட முனைந்து நின்றதும் அது தற்செயலாகக் கூனி செய்த முயற்சி காரணமாகக் கைகேசியால் தடைபட்டதும், மறுபடியும் இராமனை முடி சூடுமாறு தசரதன் அக்கிரமமாகப் பல தடவை தூண்டினதும், தன் சொல்லைக் கேளாமல் தந்திரசாலியாகிய இராமன் காடேகும்போது தசரதன் அவனைத் தடுக்குமாறு பின்னால் விழுந்தோடியதுமாகிய செயல்களையெல்லாம் உணர்ந்த அறிஞர் எவர்தான் இராமன் காளிடம் கூறிய இவ்வெறும் பேச்சைப் பொய் என்று கூறுவர்? அறிஞரே! சிந்தித்துஉண்மையுணருங்கள். இவ்வுண்மைகளை உங்கள் உற்றார் உடன்பிறந்தார் நண்பரனைவரும் உணருமாறு எடுத்தியம்பியருளுங்கள். உங்களுக்கு இதுதான் மிகத் தலைசிறந்தவொரு அறச் செயலாக நின்று உற்றுழி உதவும். இதனை மறவாதீர்கள்.

முனிவர்கள் இராமனை மெல்லமெல்லக் கான் இருக்குமிடத்திற்கு அருகே தள்ளித்தள்ளி வாழச்செய்த உண்மையை அவர்களே இராமனிடம் கூறிவிடுகின்றனர். இவ்வாரிய முனிவர்கள் தாம்வாழ்வடைவான் செய்த சூழ்ச்சியை வெளிப்படுத்துகின்றனர். இவ்வளவு சூழ்ச்சிகளுக்கும் தலைவன் இந்திரனென்றும் கூறுகின்றனர். ஆதலின் இவ்விந்திரனென்பான் சுராபானமாகிய கட்குடியராகிய சுரர்களான ஆரியர் தலைவன் என்பதும் அவன் தமிழ் மக்களின் கேட்டைச் சூழ்ந்தனன் என்பதும் உண்மை மொழிகளேயாம்.

இராமனைவிட வயது முதிர்ந்தவளும் இலக்குவன் மொழிப்படி கிழவியுமாகிய சீதை இராமனைப் பலரும் காண பலமுறை வலிய அணைத்துக்கொள்கின்றனள். கிழவிகளுக்குச் சிறுவரிடம் விருப்பு மிகுதியாம்போலும்! இக்காலத்தில் நாடகமேடைகளிலேயே இத்தகைய ஈழுவுஞ் செய்கைகளைப் பெண்கள் சிலரிடம் காண்கின்றோம். மேலும் சிறுவர் வயது முதிர்ந்த பெண்களை மணத்தல் இக்காலத்திலும் சிலரிடம் காணப்படுகிறது. முன்னர் கவிபாடும் திறமை வாய்ந்த ஓர் அறிவுடைய ஆங்கிலப் பெண்மகளாகிய கிழவி ஓர் ஆங்கிலப் புலவனைச் சிறுவனாயிருந்தும் மணந்தனள் என்ற வரலாறு காணப்படுகிறது. தற்காலத்திலுங்கூட ஜெர்மனியை அரசாண்டிருந்த கெய்சருடைய தங்கையாகிய கிழவி ஒருத்தி ஒரு வாலிபனை மணந்த செய்தி உலகறியப் பல பத்திரிகைகளிலும் சில மாதங்களின் முன் வெளிவந்திருந்ததன்றோ? இனி கம்பரது புளுகை ஆராய்வோம். (தொடரும்)

## தஞ்சை திருச்சி ஜில்லா சுயமரியாதை மகாநாடு,

26ந் தேதி ஷை மகாநாடு பட்டுக் கோட்டையில்நடைபெறும். மகாநாட்டின்வரவேற்புத்தலைவர் மயூரமணி கார்குடி திரு. ஆர். சின்னையா அவர்களும மகாநாட்டின் தலைவர் கோவை ஜில்லா போர்டு உபதலைவர் திரு. எஸ். என். பொன்னையா அவர்களும், மகாநாட்டைத் திறந்து வைப்பவர் தஞ்சை ஏ. சுந்திர பாண்டியன் அவர்களும் ஆவார்கள்.

இரு ஜில்லாக்களிலுமுள்ள சட்டசபை அபேக்ஷகர்கள் தங்கள் கூட்டுறவையும், ஒத்துழைப்பையும் அளிப்பார்களாக.

எஸ். வேணுகோபால் பி. ஏ. பி. எல்.
எஸ். வி. லிங்கம்.
காரியதரிசிகள்.

## சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு.

### நடைபெறும் விவரங்கள்.

1929 ஸு மே மாதம் 25, 26 தேதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் பட்டுக் கோட்டையில் முதலாவது தமிழ் மாகாண சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு நடைபெறும்.

26ந்தேதி மகாநாடன்று தஞ்சை திருச்சி ஜில்லா சுயமரியாதை மகாநாடு பட்டுக் கோட்டையிலேயே நடைபெறும். சர்வ கட்சி பார்ப்பனரல்லாதாரும் மகாநாட்டுக்கு விஜயமாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மகாண முழுவதுமுள்ள சங்கங்கள் மற்ற கட்சி நண்பர்கள் தங்களூரிலிருந்து எத்தனை பிரதிநிதிகள் விஜயமாகின்றார்கள் என்ற விவரத்தை வரவேற்புக் கழகத்திற்கு அறிவிக்கக் கோருகிறோம்.

மகாநாட்டிற்கு சென்னை அரசாங்க சட்டமெம்பர் கனம் திவான் பகதூர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. ராமசாமிப் பெரியாரின் திருஉருவப்படத்தைத் திறந்து வைப்பார்.

அவ்வைபவத்திற்கு இரண்டாவது மந்திரி கனம் எஸ். முத்தையா முதலியார் அவர்கள் தலைமை வகிப்பார்.

மகாநாட்டுப் பந்தலில் சட்ட மெம்பர் திவான்பகதூர் எம். கிருஷ்ணன் நாயர், திரு. ஈ. வெ. ராமசாமியார் திரு. பி. டி. ராஜன் முதலிய தலைவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். உபசாரப் பத்திரமளிப்புக் கூட்டத்திற்கு தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் ராவ் பகதூர் ஏ. டி. பன்னீர் செல்வம் தலைமை வகிப்பார்.

சுயமரியாதைத் தொண்டர்கள் மாகாண மகாநாட்டிற்கு 'ரிவோல்ட்' உதவி ஆசிரியர் திருவாளர் எஸ். குருசாமி அவர்கள் தலைமை வகிப்பார்.

காரைக்குடி "குமரன்" ஆசிரியர் திரு. சொ. முருகப்பர் மகாநாட்டைத் திறந்து வைப்பார்.

திருச்சி திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் சுயமரியாதைக் கொடியை உயர்த்துவார்.

உயர் திரு கைவல்ய சாமியாரின் திருஉருவப்படத்தை திரு. கே. வி. அழகர்சாமி திறந்து வைப்பார்,

அவ்வைபவத்திற்கு திரு. சாமி சிதம்பரனார் தலைமை வகிப்பார்,

மகாநாட்டிற்குக் கட்டணம் அடியிற் கண்டவாறு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

| | |
|---|---|
| வரவேற்பு அங்கத்தினர் | ரூ 5 |
| பிரதிநிதி | ரூ 2 |

மாகாண சுயமரியாதை தொண்டர்கள் மகாநாட்டு பொக்கிஷதார் திரு. எஸ். கே. சிதம்பரம் அவர்கள் மகாநாட்டின் நன்கொடை வசூலிக்கவும், வரவேற்புக்கழக அங்கத்தினர்கள் சேர்க்கவும் வெளி ஜில்லாக்களில் சுற்றுப் பிரயாணம் செய்கிறார். 5, 6 நாட்கள் வரையில் திருச்சி, நாமக்கல், சேலம், தர்ப்புரி ஈரோடு கோயம்புத்தூர் முதலிய இடங்களுக்குச் செல்வார். அந்தந்த ஊர் சகோதரர்கள் தக்க ஆதரவு காட்ட வேண்டுகிறோம்.

வரவேற்புக் கழகத்தார்.

## தென் ஆற்காடு, வடஆற்காடு, திருச்சி ஜில்லாக்களின் ஆதிதிராவிடர்கள் மகாநாடு.

21-4-29 தேதியில் ஷை முதலாவது மகாநாடு கள்ளக்குறிச்சியில் திரு. எம். சி. ராஜா, எம். எல். ஏ. அவர்கள் தலைமையின் கீழ் கூடிற்று. திரு. எம். சாமிநாதனால் தலைவருக்கு ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பல முக்கியஸ்தர்கள் மகாநாட்டிற்கு விஜயம்செய்திருந்தனர். தலைவர் ஒற்றுமையைப்பற்றியும் ஜாதி முன்னேற்றத்திற்கு வேண்டிய வழிகளைப்பற்றியும் எடுத்துச் சொல்லியதோடு குறைகளைத் தெரிவித்தால் தக்க முயற்சியெடுத்து கவர்ன்மெண்டுக்குத் தெரிவித்துத் தீர்ப்பதாக வாக்களித்தார். சமூக முன்னேற்றத்தைப்பற்றி திருவாளர்கள் சிவசண்முகம், பசுபாணி முதலானவர்கள் பிரசங்கித்தார்கள். சக்கரவர்த்தியிடம் நம்பிக்கை தெரிவிப்பதாகவும், திரு. எல். சி. குருசாமி எம். எல். சி. அவர்களுடைய மூத்தமகன் காலஞ் சென்றமைக்கு அனுதாபங் காட்டுவதாகவும், தரிசு நிலங்களை ஏழை ஆதிதிராவிடர்களுக்கு அடமானம் செய்யவேண்டுமென்று கவர்மெண்டில் நிலக்கிரயம் கட்ட வேண்டுமென்கிற உத்திரவைப்போட்டு ஏழைகளுக்கு யாதொரு நன்மையையும் செய்யாததுபற்றி இம் மகாநாடு விசனிக்கிறதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டபின் மகாநாடு இனிது முடிவுற்றது என்றொரு நிருபர் தெரிவிக்கிறார்.

## சென்னை சட்டசபைத் தேர்தல்

சைதாப்பேட்டை முனிசிபல் சேர்மென் கான் பகதூர் எஸ். கே. அப்துல் ரஜாக் சாஹிப் பகதூர் எம். எல். சி. அவர்கள் சென்னை சட்டசபைக்கு வடஆற்காடு செங்கற்பட்டு ஜில்லாக்களின் முஸ்லிம் தொகுதிக்கு மறுபடியும் தாம் ஒரு அபேட்சகராக நிற்கப்போவதாகத் தெரிவித்திருக்கிறார்.

சென்னை சட்டசபைக் காரியதரிசி டாக்டர் சையத் தாஜுடீன் எம். எல். சி. அவர்கள் தஞ்சைஜில்லா முஸ்லிம் கிராமத்தொகுதிக்குத்தாம் ஒரு அபேட்சகராக நிற்பதாகத் தெரிவிக்கிறார்.

## திசையன் விளையில் பானகல் அரசர் இலவச வாசகசாலைத் திறப்புவிழா.

29—4—29 தேதியில் போஸ்ட்மாஸ்டர் திரு. ஏ. எஸ். சங்கரநாராயண ஐயர் அவர்கள் தலைமையின்கீழ் சப்ரிஜிஸ்தரார் திரு. எஸ். செல்லம் ஐயங்கார் பி. ஏ. அவர்களால் பானகல் அரசர் இலவச வாசகசாலைத் திறப்புவிழா நிகழ்த்தப்பட்டது. அதுகாலை நிர்வாக அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர். இவ்வாசகசாலை ஏற்பாட்டிற்கு திருப்பூர் திரு. கண்ணாயிரம் அவர்களுடைய முயற்சிபாராட்டத்தக்கது என்று திரு. சு. அருணாசலம் அறிவிக்கிறார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

வைணவர்களுமிருக்கிறார்கள் என்று நினைத்துப் புராணக் கதைகளைச் சுருக்கி விட்டேன். நமது நாட்டில் நடக்கும் சில சங்கதிகள் அவர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதை இன்னொருதரம் அவர்களுக்குச் சொல்லுகிறேன்.

சுமார் பத்து வருடமாக திரு. கலியாண சுந்தர முதலியார் பிராமணரல்லாதவர்களுக்கு இடையூறாகின்ற ஜஸ்டிஸ்கட்சியைக் குற்றம்சொல்லவே 'ஹோம் ரூல்' என்று ஒன்று ஏற்படுத்தி அதற்குத் தகுந்த பத்திரிகையும் அவரிடம் கொடுக்கப்பட்டது. அதனால் அவர் பத்திரிகைப் பண்டிதரானார். சமயம் வரும்போதெல்லாம் பார்ப்பார்களிடம் சேர்ந்து கொண்டு எலக்ஷன் வரும்போதெல்லாம் ஜஸ்டிஸ் கட்சியைக் குற்றம் சொல்லும் வேலையையே ஏற்றுக்கொள்ளுகிறார். சுயமரியாதைக் காரர்கள் புராண சாஸ்திரங்களைக் குற்றம் சொன்னால் அவர்களுக்குச் சமாதானம் சொல்ல வேண்டுமேயல்லாமல் ஜஸ்டிஸ் கட்சிக்காரர்களுக்கு ஓட்டுக் கொடுக்காதீர்கள் என்று ஏன் சொல்ல வேண்டும்? அய்யங்கார் ஆள்களுக்கு தாம் பின்னாலிருந்து கொண்டு அவர்களைத் தூண்டிவிட்டும் தம் கூட்டத்தாருக்கு வலது கையாலே மதப்பிரசாரம் செய்வது போல நடித்து அவர்களை இடது கையாலே கொள்ளையடிக்கப் பார்ப்பானுடன் சேர்ந்து தம் ஆசையையும், பெருமையையும், தந்திரத்தையும் சுயமரியாதைக்காரர்களின் பேரில் போடும் பழியால் எடுத்துக் கொண்டு மனிதனுடைய சமாதானத்திலும் பொது சகோதரத்தன்மையிலும் தமக்கு நல்லெண்ணமிருப்பது போல சாதுத் தன்மையாகப் பேசியும்வருகிறார். ஆனதால் உங்கள் சமயத்தைக் காப்பாற்ற வந்து விட்டார் என்று மட்டும் நினைத்து கவலையற்று இருந்து விடாதீர்கள். உங்கள் வாழ்விற்கு உறுதியாகிய உண்மையை நீங்கள் முழுதும் உணர்ந்து கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. பராக்காக இருக்கும் போது உங்களுக்கு விபத்து வராமல் தடுக்கும்படி முற்காலம் நீங்கள் ஈசனிடம் விட்டிருந்தீர்கள். தற்காலத்தைப் பற்றி நீங்களே சரியான தீர்மானம் செய்ய வேண்டுமென்று எல்லாரையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வடிவேல் செட்டியார் சுயமரியாதைக் காரர்களை அறிவிலிகள் என்று ராயபுரம் கண்ணபிரான் பக்தஜனசபையில் சொன்னதாக 'சுதேசமித்திரனி'லிருக்கிறது. எங்களுக்கு அதைப்பற்றிக் கவலையில்லை. உலகமிருக்கிறது நியாயமிருக்கிறது, ஒன்றிலும் சேராமல் பார்த்துக் கொண்டிருக்கும் பண்டிதர்களிருக்கிறார்கள். இலட்சுமி இமயமலைச்சாரலில் உலாவிக் கொண்டிருந்தாள். அவ் வழியே ஒரு ரிஷி போனார். அவரைக் கண்டு இலட்சுமி மோகித்தாள். இலட்சுமிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்து விட்டது. இது விஷ்ணுவிற்குத் தெரிந்து சண்டாள ஸ்திரீயாக போகக் கடவதென்று இலட்சுமியைச் சபித்தார். அப்படி இலட்சுமி சண்டாளச்சியாகி விட்ட காவியமே காதம்பரி என்னும் நூல். இது பாணபட்டர் என்னும் பண்டிதரால் எழுதப்பட்டது. காதம்பரி என்னும் நூல் வடமொழி படிக்கும் மாணவர்களுக்கு பாடமாகப் பள்ளியில் வைக்கப்பட்டிருக்கிறது. சீதை, இலட்சுமியின் அம்சமென்று சிலரும், ராவணன் கொண்டு போனது மாயாசீதை என்றும், ராமரைப் போலவே மாயா சம்பந்தம் சீதைக்குமுண்டென்று சிலரும் சொல்லுவார்கள். சாட்சாத் இலட்சுமியே ரிஷியைக் கண்டு மோகித்து பெண் குழந்தையைப் பிரசவித்து விஷ்ணுவால் சண்டாளஸ்திரியானாள். என்று பண்டிதர்களே சொல்லியிருக்கிறார்கள் காதம்பரி செய்த பாணபட்டர் கூரத்தாழ்வாரின் மகனாயிருந்தாலும் போஜராஜாவின் பட்டராக விருந்தாலும் இந்தப் பண்டிதர்களைவிட மேலானவரே.

பிர்மம், மாயா, அவித்யா என்று பேசி வீட்டிற்குப் போனவுடன் அங்கில்லா சாமக்கிரிகைகளுக்கு வருந்தி சஞ்சிதம் பிராரப்தம், ஆகாமியம், என்று சொல்லி பிராரப்தம் அனுபவித்தீர வேண்டுமென்று முடிவு கட்டி அண்ணாந்து சுயமரியாதைக்காரர்களைக் குற்றம் சொல்ல வந்த திருவடிவேல் செட்டியார் அவர்கள் மகாபண்டிதர் நமசிவாய முதலியார் வாசற்படியை எட்டிப் பார்த்தாரானால் உலகம் உதயமாகும்.

## பவானியில் ஒரு கிறிஸ்தவ சாது.

சென்ற ஒருவாரமாக ஆந்திரதேசத்து கிறிஸ்துவ சந்நியாசியாகிய சுமார் 25 வயதுள்ள சாது கொண்டையா என்பவர் தினந்தோறும் காலை 9மணி முதல் பகல் 12 மணிவரை மதபோதனை செய்தும் பிரார்த்தனையால் நோயாளிகளை சொஸ்தசெய்வதாக பிரார்த்தித்து ஆசீர்வாதம் செய்தும்வந்தார். குஷ்டரோகி பேய் பிசாசுபிடித்த நபர்கள் வந்திருந்தனர். வியாதிகள் யாதொன்றும் நிவர்த்தியாகவில்லை. பேய்பிசாசுகளை ஓட்டும்பொழுது சாதுவுக்கே பேய் பிடித்தது போல அலறுவதையும், பேய்பிடித்த பெண்ணின் தலைமேல் அவர் கைகளை வைத்துக்கொண்டு அவளைச்சுற்றி வருவதையும் பார்த்து ஜனங்கள் சாதுவுக்கே சைத்தான் பிடித்துவிட்டதோ என்று சந்தேகித்தார்கள். சாது காவியாடை தரித்து, ஆவிவந்தவர்போல் அபிநயித்து வாயையமென்று பெருங்கூச்சல் போடுவார்.

பொதுவாகவே இந்துக்கள் காஷாயதாரிகளை வணங்கி சாமி என்று நம்பி சாம்பலையும், தண்ணீரையும் வாங்கும் சுபாவமுடையவர்கள். அதிலும் ஓர் கிறிஸ்தவ சாது காஷாயம் தரித்து பிணியை நீக்குவதாக சொன்னதால் அநேக மூடநம்பிக்கையுள்ள இந்துப்பெண்கள் வந்தார்கள். சாது அவர்களை பிரபு இயேசுகிறிஸ்துவை பூரணமாய் விசுவாசித்தால் தான் வியாதி குணமாகும் என்று ஆசீர்வதிப்பது வழக்கம். நோய் நீங்கவில்லை என்றுசொன்னால் நீ கிறிஸ்துவை நம்பாததனால் குணமாகவில்லை என்பார். பாழும் காஷாயப்பூட்டு இயேசுகிறிஸ்துவின் மதத்திலுமா நுழையவேண்டும்?

நிற்க, இந்து மதாபிமானிகளாகியசிவமே அன்பு அன்பே வைஷ்ணவம் என்பவர்களுடைய மடாதிபதிகள், தம்பிரான்கள், ஆச்சாரிகள், ஜீயர்கள், சங்கராச்சாரிகள், கனபாடிகள், ஜடாவல்லவர்கள் சாஸ்திரிகள் முதலியவர்கள் அன்னைப்பற்றி கவலை கொள்ளாது, பிராமண போஜனமும் பகற்கொள்ளையும் மோட்சத்தின் பேராலும், சாமிகளின் பேராலும் நடத்திவந்தால் ஏன் இம்மாதிரி சாதுக்கள் கல்வி அறிவில்லாத இத்தேசத்தில் பிறமதத்தில் சேர்க்க எத்தனிக்க மாட்டார்கள்?

உண்மை உரைப்போன்.

## திருச்சி மருத்துவகுல சங்கம்.

20—4—29 தேதி மாலை 4-மணிக்கு திரு. அய்யாக்கண்ணு அவர்கள் தலைமையின்கீழ் மேற்படி சங்கக் கட்டிடத்தில் ஒரு கூட்டம் கூடியது. அப்போது திரு. க. பிச்சைமுத்து திரு. மருதை, சிலோன் மருத்துவகுல சங்கத்தலைவர் திரு. கணபதி. கருப்பையா ஆகியவர்கள் "குல முன்னேற்றம்" என்பது பற்றிப் பிரசங்கம் செய்தார்கள். முதன் மந்திரி கனம். சுப்பராயன் அவர்கள் திரு. எஸ். எஸ் ஆனந்தம் அவர்களை நாமினேஷன் செய்ததைக்குநன்றிசெலுத்துவதாயும், சைமன் கமிஷனிடம் மெமோராண்டம் வாசித்துக் குறைகளைத்தெரிவித்த எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைப் பாராட்டுவதாயும் ஈரோட்டில் ஆலயப் பிரவேசஞ்செய்த வீரர்களான திருவாளர்கள் ஈஸ்வரன், பசுபதி, கருப்பன் ஆகிய மூவர்களையும் பாராட்டுவதாயும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்று திரு. க. பிச்சைமுத்து தெரிவிக்கிறார்.

## பொருள் செய்வகை.

1 உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2 வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3 வியாபாரத்தில் எந்தெந்த காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4 வியாபாரத்தில் சித்தி அடையும் விதம் என்ன?
5 புக்கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6 துணிந்து செய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் எவை?
7 தினுசுகள் விலை ஏறுவதும் இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8 கடை வைக்குமிடம் எது?
9 முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10 நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவை என்றும் உங்களுக்குத் தெரியுமா?

இந்தமாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன் விலை ரூபாய் ஒன்றுதான் விலாசம்—

தேவி ஆஸ்ரமம், திரோபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.

## வேதப்புரட்டை வெளியாக்கும்

## "ஞான சூரியன்" இரண்டாம் பதிப்பு

முன் விலை ரூபாய் 1. இப்போதைய விலை அணா 0—8—0

ஒரே தடவையில் ஐந்து புத்தகம் வாங்குவோருக்கு தபால் சார்ஜ் இனும். ஒரு புத்தகம் வேண்டுவோர் 10 அணா ஸ்டாம்பு அனுப்பவும். V. P. மூலம் அனுப்பினால் 14 அணா ஆகிறது.

திரு. சந்திரசேகரப்பாவலரால் எழுதப்பட்ட இராமாயணத்தின் ஆபாசம்

| | |
|---|---|
| பாலகாண்டம் | விலை அணா 0—4—0 |
| சுயமரியாதைப்பாடல்கள் | விலை அணா 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல்திரட்டு | விலை அணா 0—2—0 |

விலாசம்:— மானேஜர், 'குடி அரசு' புத்தகாலயம், ஈரோடு.





ஏழு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழனி சித்த வைத்திய சங்க அமைச்சர்!! தமிழ் சித்த வைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

பலனில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப்படும்.

நீங்கள் என்றுமழியாத இளமைப்பருவத்தை அடையவேண்டுமானால்,

### சி. எம், சாமி மகா வீரிய

## தங்க பஸ்பம்

சாப்பிடுங்கள். தாதுபுஷ்டியில் மன்மதனுக்கொப்பாவீர்கள்,

தாது புஷ்டியில் நிகரற்றது. மகான் அருளால் கிடைக்கப்பட்டது. வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், கபக்கட்டு, குன்மம், சூலை முதலிய வியாதிகளும் நீங்கும். அழிந்துபோன ஆண்மையையும் இழந்த பலத்தையும் இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வயோதிகனை வாலிபனுக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வ சக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக் கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒரு முறை உபயோகித்தால் உண்மை விளங்கும்;

48 நாள் பஸ்பம் ரூ. 20. 24 நாள் பஸ்பம் ரூ, 10.

1. தங்கள் மகா வீரிய தங்கபஸ்பத்தைப்பற்றி எனக்குத்தெரிந்தமட்டில் இதற்கு நிகரான மருந்து கிடையாது என்பதை மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறேன். தாங்கள் நீடூழியாய் இருக்க வேண்டியது. ரெம்ப ஜனங்கள் தங்கள் மருந்தினால் பிழைத்து ஜீவிப்பார்கள்.

10—1—29. ரூம. துரைப்பாண்டிய வீரணனம்பலம், இராமனுதபுரம்.

### குரு அப்ரேக் செந்தூரம்—நீரழிவுக்கு,

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிவர்த்தி தேகவெளுப்பை மாற்றி ரத்த விர்த்தியையும், தேக புஷ்டியையும் தரும். சகல மேகமும் க்ஷய ரோகமும் நீங்கும். தளுக்கற்றது. 24 நாள் புட்டி 1 க்கு ரூ. 15. 48 நாள் புட்டி 1 க்கு ரூ. 30.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் அட்வான்ஸ். அனுப்பவேண்டும்.

### சித்த ஆயுர்வேத வைத்தியாசிரியர்

### C. மலையப்பசாமி

நித்தியானந்த வைத்தியசாலை, பழனி. S. I.

(12-b)



## சுயமரியாதைத் தொண்டன்.

இஃது

கடவுள் மதம் வேதம் புராண இதிகாசத்தின் பேராலும் அரசியலின் பேராலும் நமது நாட்டையும் சமூகத்தையும் பாழ்படுத்திவரும் ஜாதி வெறியர்களையும் சமய வெறியர்களையும் கூலிபிரசாரக் காலிகளாகிய ஆஸ்திக பூச்சாண்டிகளையும் தயவு தாட்சண்யமின்றிக் கண்டித்து மக்களுக்குச் சுயமரியாதை, சுதந்தரம், சமதர்மம், சகோதரத்துவம், பெண்கள் விடுதலை முதலிய முன்னேற்ற விஷயங்களை ஊட்டித்தட்டி எழுப்ப உதித்ததொண்டனுக்கு இன்றேசந்தாதாரர்களாகச் சேர்ந்து ஆதரியுங்கள்.

| | |
|---|---|
| வருடசந்தா | 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | 4—0—0 |

இதன் ஆசிரியர், இ. சாமிநாதன்

விலாசம்:—

மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்" பள்ளிபாளையம், (via) ஈரோடு.



## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்சில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் லெறெப் ளேன் டிரேட் மார்க் உள்ளது ரூ1—8—0.

உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை

244, தங்கசாலை வீதி, மதராஸ்,



ரூ. 2—14—0 ரூ. 2—14—0

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ, 2-14-0.

கனடியன் வாட்சு பீபின்,

ஸோல் ஏஜண்ட்ஸ்,

(4-d) ஜார்ஜ் டவுன், மதராஸ்.


**சுயராஜ்யம் பெறுமுன் சுயமரியாதை வேண்டும்.**

# மன்மத காமினி புஷ்டிலேகியம்.

கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்களின் சம்பந்தம் சிறிதுமின்றி தயார் செய்யப்பட்டது. வெட்டை குஷ்டிஞலுண்டான தாது நஷ்டத்திற்கு சஞ்சீவி போன்றது. இரத்தத்தை சுத்திப்படுத்தி விருத்திசெய்து இந்திரிய விளைவை உண்டாக்கி ஆண்மையை அதிகப்படுத்தும். மேகவாயு, மேகசூலை, மேகஊறல், மேகரணம், மேகக்கட்டி, முதலிய எல்லா மேகரோகங்களையும் நீக்கும். இரத்தம் கெட்டு உண்டான சொறி, சிரங்கு, புண் முதலியவைகளையும் குணப்படுத்தும். தேகத்திற்கு இயற்கையான நிறத்தையும் பலத்தையும் உண்டாக்கி தேகத்தை வச்சிர காயமாக்கும்.

சேர் 1-க்கு விலை ரூ 6-0-0 வி. பி வேறு.

# மதன காமேஸ்வர லேகியம்.

துரித சொற்பன வெளியீடுகளை நிவர்த்தித்து தளர்ந்து போன நரம்புகளுக்கு முறுக்கேற்றி ஜனனேந்திரியக் கருவிகளைப் பலப்படுத்தி அபார தாதுபுஷ்டியை உண்டாக்கும்.

சேர் 1-க்கு விலை ரூ. 3-0-0 வி. பி வேறு.

**மஹா சௌபாக்ய சுண்டி.**
பிரசவத்திற்கு பின் எவ்வித வியாதியும் ஏற்படாமல் காப்பாற்றி பலத்தை விருத்தி செய்யும்.
சேர் 1-க்கு விலை ரூ. 2-4-0
வி. பி. வேறு.

**பஞ்ச தீபாக்னி லேகியம்.**
இரைப்பை சம்பந்தமான சகல ரோகங்களையும் நிவர்த்திக்கும், பசிதீபனத்தை உண்டாக்கும்.
சேர் 1-க்கு விலை ரூ. 1-8-0
வி. பி. வேறு.

முக்கிய குறிப்பு:— அன்னியநாட்டார் முன் பணம் அனுப்ப வேண்டும்.
(13) சித்தவைத்திய சாலை, ஆநந்த நிலயம் திருச்சங்கோடு S. I.



எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை, (4-h)

**ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள்.**




இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜினேன் வாட்சு கம்பெனி,
பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



நிமிஷக்கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?
அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் ஆச்சரிய நிவர்த்தி!!

# சுவாச காச ரோக நிவாரணி.

## Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காகரப்பு எரிச்சல், வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும், நாசியிலும், நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பதவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரதியேகம். பினாங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8—0 அனுப்பவேண்டும்.

புரொப்ரைட்டர், பூ. மா. சோக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(18) அங்காளம்மன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.



# ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, இலங்கைக்கு வருட சந்தா ரூ. 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3311.
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

## இனாம்! இனாம்!!



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினேன் வாட்சு கம்பெனி,
(4-f) பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



# மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸ் ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,
இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,
(16) மைலாப்பூர், மதராஸ்



# "முன்னேற்றம்."

இது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அநீதிகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி
வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
(f) 152, ... ரோட், சிங்கப்பூர்.


... ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.